விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram. Ria. WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 29 திங்கட்கிழமை (14.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361

## கொரோனாத் தொற்று அபாயம்
## உடுவில், தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட உடுவில், தெல்லிப பழை கல்விக் கோட்டப் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் நேற்று ஞாயிற்றுக் 19

## உடுவில் பிரதேசம் முற்றாக முடங்கியது





19

### திருநெல்வேலி சந்தையில்
## 39 பேருக்கு பிசிஆர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பிரதான சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலி 19

### வவு.சாளம்பைக்குளம்
## பாடசாலைக்கு பூட்டு

(வவுனியா)

வவுனியா சாளம்பைக்குளம் அல் 19

### நல்லூர்ப் பகுதியில்
## ஐஸ்கிறீம் கடையில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பகுதியில் 19

### பொதுச் சந்தைகளில்
## எழுமாற்றுப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் பொதுச் சந்தையுடன் குடாநாட்டில் பல்வேறு சந்தை வியாபாரிகளும் தொடர்புபட்டிருப்பதால் அனை 19

## மேலும் 26 பேருக்கு உருவெடுத்தது கொரோனா
# யாழில் தொற்றுறுதி

*(யாழ்ப்பாணம்)*

**மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர்களுக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில்,**

**கொக்குவில் - 1, தெல்லிப்பழை - 3, அளவெட்டி - 2, உரும்பிராய் - 1, நவாலி - 1, கீரிமலை - 2, மானிப்பாய் - 2, உடுவில் - 2, இணுவில் - 2, சங்கானை - 1, பண்டத்தரிப்பு - 1, சுன்னாகம் - 2, கைதடி - 1, ஏழாலை - 3, காங்கேசன்துறை - 1, சண்டிலிப்பாய் - 1 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.** *(19ஆம் பக்கம் பார்க்க)*

## எனது 5 மாத சிசுவை மண்ணுக்குள் புதைத்தேன்
### கிளிநொச்சியில் பெண் வாக்குமூலம்

(முறிகண்டி)

கிளிநொச்சி - பிரமந்தனாறு பகுதியில் பெண் ஒருவர் தனது 5 மாத சிசுவை மண்ணுக்குள் புதைத்ததாக பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, 19



## தொற்று எண்ணிக்கையை மறைப்பது குற்றமாகும்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கையை மறைப்பதும், கொரோனாத் தொற்றாளர்கள் தலைமறைவாகி திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும்கொரோனாத் தொற்றாளர்களும் அசமந்தப்போக்கில் செயற் 19

## உடுவில் பிரதேசம் முடக்கலிலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட்டது
### வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள சமூக முடக்கல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கெனவே சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் தொடர்ந்தும் 14 19

## கொரோனாத் தொற்றால் மேலும் மூவர் மரணம்
### நேற்றும் +650 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை கோவிட் - 19 நோயால் மூவர உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 152ஆக உயர்வடைந்துள்ளது. 19

# மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய முறையில் நடத்துவதே சாத்தியம்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய நிலைமையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைந்து நடத்துவதாக இருந்தால் பழைய முறையிலேயே அதனை முன்னெடுக்க முடியும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்துடன், தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மாகாண சபைத் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்துவதாக இருந்தால் மேலும் சில வருடங்கள் தேவைப்படும் என்று சுட்டிக்காட்டிய அவர், தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நிறைவேற்றுத்துறையான பாராளுமன்றத்திடமே காணப்படுவதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில், பழைய முறைமையில் மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும் பட்சத்தில் உடன் தேர்தலை நடத்தவதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். இந்த விடயத்தில் கவனம் எடுக்குமாறு பிரதமரும் ஆலோசனை வழங்கியுள்ளார்.


எனினும், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவது தொடர்பில் நிறைவேற்றுத்துறையான பாராளுமன்றமே தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இல்லை. ஆகவே புதிய முறையிலோ அல்லது பழைய முறையிலோ தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் பாராளுமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது.

மேலும், புதிய முறையில் தேர்தலை முன்னெடுப்பதாக இருந்தால் சில வருட கால அவகாசம் தேவையாக உள்ளது. ஆகவே பழைய முறைமையிலேயே தேர்தலை நடத்துவதே சமகால நிலைமைகளின் அடிப்படையில் சாத்தியமானதாக இருக்கும்.

ஆகவே பாராளுமன்றத்தில், மாகாண சபைகளுக்கான தேர்தல் புதிய முறைமையில் நடத்தப்படுவது சொற்ப காலத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாகவும் அதுவரையில் பழைய முறையிலேயே அவற்றுக்கான தேர்தலை நடத்தவுள்ளதாகவும் அரசியல் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது.

அத்தீர்மானம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் தேர்தலை நடத்துவதில் ஆணைக்குழுவிற்கு எவ்வித மான சிக்கல்களும் இல்லை. உடன் தேர்தலை நடத்துவதற்கான பணிகளை முன்னகர்த்த தயாராகவே உள்ளோம் என்றார். (ஞா)

# மருதனார்மடம் பகுதியில் தொற்று நீக்கல்



(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தவிசாளரின் நேரடிக் கண்காணிப்பில் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகளுக்கு கொரோனாத் தெர்ற்று அடையாளம் காணப்பட்டதையடுத்து உடுவில் பிரதேச செயலர் பிரிவு முடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன் நேரடியாக கொரோனாத் தொற்றாளர்கள் நடமாடிய மருதனார்மடம் சந்தை வளாகம் உட்பட்ட பகுதிகளில் தொற்று நீக்கல் நடவடிக்கைகளை நேற்றைய தினம் முன்னெடுத்தார். (ஞா)

# வெள்ளவத்தையில் சில பகுதிகள் முடக்கம்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை மயூரா பிளேஸ் பகுதி இன்று அதிகாலை 5 மணி தொடக்கம் தனிமைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைகளம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அத்துடன், குடியிருப்பு திட்டங்களில் விதிக்கப்பட்டிருந்த முடக்கம் இன்று அதிகாலை 5 மணி தொடக்கம் தளர்த்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

# மயங்கி விழுந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

## அராலி கிழக்கில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி கிழக்கைச் சேர்ந்த பெண் ஒருவர் திடீரென மயங்கிச் சரிந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புக் காரணம் தொடர்பில் கண்டறிவதற்கு குருதி மாதிரிகள் பெறப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அராலி கிழக்கைச் சேர்ந்த குடும்பத் தலைமைத்துவ பெண்ணும் 2 பிள்ளைகளின் தாயுமான மதுசன் பிரபாகினி (வயது - 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி அவர், வீடு பெருக்கிக் கொண்டிருக்கும் போது மயங்கிச் சரிந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டது.

7 நாட்களின் பின்னர் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணத்தை கண்டறிவதற்கு குருதி மாதிரிகள் பெறப்பட்டு கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஞா)

## வீதியை மறித்து போராட்டம்

# 6 நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(வவுனியா)

வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 6 நபர்களுக்கு எதிராக பல்வேறு குற்றசாட்டில் வவுனியா நீதிமன்றில் பொலிஸாரினால் நேற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பட்டானிச்சூர் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தின் முன்பாக கடந்த 05ஆம் திகதி உயரழுத்த மின்சாரத் தூண்களை மின்சார சபை நிறுவ முற்பட்டதால் அப்பகுதியில் மின்சார சபைக்கு எதிராக வவுனியா - மன்னார் வீதியினை தடை செய்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் காரணமாக வவுனியா - மன்னார் பிரதான வீதிப் போக்குவரத்து 3 மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த போராட்டத்தினை மேற்கொண்ட முக்கிய 6 நபர்கள் மீது வவுனியா மாவட்ட நீதிமன்றில் அரச ஊழியரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தியமை, கோவிட் -19 விதிமுறைகளை மீறிச் செயற்பட்டமை போன்ற பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வவுனியா பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஞா-250,299)

# கோவிட் கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

(கொழும்பு)

கோவிட் நோய்த் தொற்று கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

பியகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் கோவிட் தொற்று பரவுகை அதிகரித்துள்ளது எனவும் பாடசாலைகள், மதுச்சாலைகள் என்பன மூடப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்பொழுது பாணி வகைகள் மாத்திரைகள் என்பன எடுத்துக் கொள்கின்றார்கள் எனவும் இதனால் என்ன நேருமோ எனத் தெரியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1956ஆம் ஆண்டில் சூரிய கிரகணம் ஏற்பட்ட போது இவ்வாறு வதகஹா பெத்தி என்னும் உள்நாட்டு மருந்து ஒன்றை எடுத்துக் கொண்டதனால் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டது எனவும் பெரும் தொகையான மக்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட மருந்துகளையே நாம் எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் இந்த உள்நாட்டு மருந்துகளை பயன்படுத்துவது குறித்தான பிரச்சாரம் பிழையான முன்னுதாரணமாக அமைந்து விடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஞா)

# மணமகனுக்கு கொரோனா பலர் தனிமைப்படுத்தலில்

## இரத்தினபுரியில் சம்பவம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் வெளிநாடு செல்லவிருந்த நபர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

ரக்வான - உக்வத்தை பிரதேசத்தில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற திருமணமான இளைஞருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.

திருமணத்தின் பின் வெளிநாடு செல்வதற்காக மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டமை உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக உக்வத்தை பிரதேசத்தில் 13 குடும்பத்தை சேர்ந்த 70 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஞா)

## குணமடைந்தோர் 23,304

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 489 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை 23 ஆயிரத்து 304 பேர் கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

நாட்டில் இதுவரையில் 32 ஆயிரத்து 135 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 23 ஆயிரத்து 304 பேர் குணமடைந்துள்ள நிலையில், 8 ஆயிரத்து 193 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# மக்களை சமத்துவத்துடன் நடத்த வேண்டிய கடப்பாட்டை இலங்கை மறக்கக்கூடாது

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

**(கொழும்பு)**

**அடக்கு முறைக்கும் அச்சத்திற்கும் உட்பட்டிருக்கும் முஸ்லிம் சமூகத்தை மேலும் வலுவிழக்கச் செய்வதற்கான வழிமுறையையே இலங்கை அரசாங்கம் தெரிவு செய்திருக்கிறது. நாட்டு மக்கள் அனைவரையும் சமத்துவத்துடன் நடத்த வேண்டிய கடப்பாடு தமக்கு இருப்பதை இலங்கை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.**

இது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய அலுவலகத்தின் தொடர்பாடல் மற்றும் பிரசார உதவியாளர் ரெஹாப் மஹமூர் பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகப் பெருமளவானோர் அச்சத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள். கொரோனா வைரஸ் தொற்று ஏற்படல், தம்மால் வைரஸ் தொற்று பிறருக்குப் பரவுதல், தமது அன்பிற்குரியவர்கள் வைரஸ் தொற்றினால் துன்பப்படுவதைக் காணுதல் மற்றும் அவர்களின் மரணத்தை எதிர்கொள்ளல் உள்ளிட்ட அச்சம் பலர் மத்தியிலும் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இலங்கை முஸ்லிமகளைப் பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட அச்சத்திற்கு மேலாக தமது அன்பிற்குரியவர்கள் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் பட்சத்தில் அவர்களை அடக்கம் செய்ய முடியாது என்றும் அவர்களுக்கான இறுதி கௌரவத்தை அளிக்க முடியாது என்றும் அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படும் நாட்டில், தற்போது கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அவர்களது மத ரீதியான நம்பிக்கையின் பிரகாரம் அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதுடன் அந்த சடலங்கள் வலுக்கட்டாயமாகத் தகனம் செய்யப்படுகின்றன. இது இலங்கையின் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

AMNESTY INTERNATIONAL

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தைப் பலரும் உணர்ந்து கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், ஏற்கனவே அடக்கு முறைக்கும் அச்சத்திற்கும் உட்பட்டிருக்கும் ஒரு சமூகத்தை மேலும் வலுவிழக்கச் செய்வதற்கான வழிமுறையையே இலங்கை தெரிவு செய்திருக்கிறது.

நாட்டு மக்கள் அனைவரையும் சமத்துவத்துடன் நடத்த வேண்டிய கடப்பாடு தமக்கு இருப்பதை இலங்கை அரசாங்கம் மறந்து விடக்கூடாது என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம்

(கொழும்பு)

39 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவின் கையெழுத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் குறித்த நியமனங்கள் செல்லுபடியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆரம்ப சுகாதார சேவை, தொற்று நோயியல் மற்றும் கொரோனா நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.பி.ஜி. குமாரசிறியும் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜி.சி.கருணாரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளராக கே.ஆர். உடுவாவல நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் யோசனை முன்வைக்கத்திட்டம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான யோசனையொன்றை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்கள் முன்னணியின் மகளிர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டபோது அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று இடம்பெறவுள்ள அமைச்சரவையில் இந்த யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மிகவும் செயற்றிறன் வாய்ந்த தடுப்பு மருந்து விரைவில்



**(கொழும்பு)**

**உலகிலேயே மிகவும் செயற்றிறன் வாய்ந்த கொவிட் தடுப்பு மருந்தை விரைவில் தருவிக்கப்போவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. கொரோனாத் தொற்று தீவிரமாக உள்ள பிரதேசங்களில் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்து தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண மேலும் தெரிவித்தார். (ஐ)

# மாணவர்கள் தனிமைப்படுத்தலுக்கு



(அம்பாந்தோட்டை)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் இருவரும் கொவிட் - 19 தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அழைத்துச் செல்லப்பட்டனர்.

வைரஸ் தொற்றியுள்ள மாணவி மாத்தறை கம்புறுபிட்டியவில் உள்ள சிகிச்சை நிலையத்துக்கும் மாணவன் அம்பாந்தோட்டையிலுள்ள சிகிச்சை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் ஆசிரியையொருவருக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


# விடுதலைப் புலிகளின் போராட்டம் நியாயமானது

## பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**அயர்லாந்து பின்னணியைக் கொண்ட தனது, பாட்டனால் அயர்லாந்து விடுதலை இயக்கத்தில் இருந்தவர் அந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் நியாயத்தன்மை தனக்கு புரிகின்றது என பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் தெரிவித்துள்ளார்.**

பேராசிரியர் பொய்ல் 1995ம் ஆண்டு முதல் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு குரல் கொடுத்துவருபவர் என்பது மட்டுமல்லாது, தமிழ் மக்கள் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ தனியரசுக்கு உரித்துடையவர்கள் என உரக்கக்கூறி வருபவர்.



கடந்த 9 ஆம் திகதி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளையோர் பிரிவு "அலைகள்" ஒருங்கிணைத்திருந்த "அனைத்துலக இனப்படு கொலையைத் தடுப்பதற்கும், தண்டிப்பதற்குமான ஐ.நா பிரகடனத்தின் அனைத்துலக நாள் இணையவழி கருத்தரங்கில் சிறப்புரையாற்றும் போதே இக்கருத்தினை பேராசிரியர் முன்வைத்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், செர்பனிக்கா இனப்படுகொலையில் 8000 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதனை உலக நீதிமன்றம் இனப்படுகொலையென ஏற்றுக் கொண்டுள்ளது. முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இனப்படுகொலைக்கு படுகொலை என்பது எண்ணிக்கையின் அடிப்படையிலானது அல்ல. அப்படுகொலைக்கான நோக்கம் இனப்படுகொலைக்கானது என்பதே முக்கியமானது. ஈழத் தமிழர்களுக்கு நடந்ததும் இனப்படுகொலை தான்.

இதற்கான பரிகார நீதியினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என அவர் தெரிவித்தார்.

பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் பலஸ்தீன இயக்கங்களுடன் சட்ட ஆலோசகராக நீண்டகாலம் பணியாற்றியிருந்தவர் என்பதோடு, உலக நீதிமன்றத்தில் பொஸ்னியா-கெர்சிகோவினா இனப்படுகொலைக்கு நீதிவேண்டி அம்மக்களுக்காக சட்டப் போராட்டம் நடத்தி நீதியைப் பெற்றவர். (ஜ-4)

# உள்ளூர் சிகிச்சை முறை தொடர்பில் விஞ்ஞான ரீதியான உறுதிப்படுத்தலை துரிதப்படுத்துக

## பிரதமர் அறிவுறுத்து

(கொழும்பு)

கொவிட்-19 இற்காக தேசிய மட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சிகிச்சை முறை மற்றும் ஔடதங்களை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தேசிய ஆராய்ச்சி சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.



அதற்கமைய கொழும்பு பல்கலைக்கழகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூர் மருத்துவமொன்றை, கலாநிதி ஹர்ஷ சுபசிங்க மற்றும் இந்திக ஜாகொட ஆகியோரினால் கொவிட்-19 இற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட உள்ளூர் சிகிச்சை முறை மற்றும் கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத வைத்தியரின் ஔடத பானியை மேலும் விஞ்ஞான ரீதியில் ஆய்விற்கு உட்படுத்தி உறுதிப்படுத்துவதற்கு பிரதமர் தேசிய ஆராய்ச்சி சபைக்கு பரிந்துரைத்துள்ளார்.

கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத வைத்தியரின் ஔடத பானி தொடர்பான ஆராய்ச்சி பத்திரமொன்று ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பேராசிரியர்களின் தலையீட்டுடன் முன்வைக்கப்படுவதுடன், அது தொடர்பான ஆய்விற்கு நாட்டின் அனைத்து மருத்துவக் கல்லூரிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உடலியல் விஞ்ஞானம் தொடர்பான நிபுணத்துவ அறிவுமிக்க சிரேஷ்ட பேராசிரியர்கள் ஐந்து பேர் மற்றும் தேசிய ஆராய்ச்சி சபைக்காக தேசிய ஆராய்ச்சி சபையின் தலைவர் மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் வைத்திய நிபுணர் பேராசிரியர் ஹேமந்த தொடம்பஹல ஈடுபட்டுள்ளார்.

இந் நிலையில், உலகில் கொவிட்-19 தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசி வகைகள் குறித்து ஆராய்ந்து அது தொடர்பிலான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இதற்கு முன்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தேசிய ஆராய்ச்சி சபைக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அதற்கமைய தயாரிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொவிட்-19 இற்கு இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சிறந்த மூன்று தடுப்பூசிகள் தொடர்பான சீ.டீ.ஏ. அறிக்கை தேசிய ஆராய்ச்சி சபையினால் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# போசாக்கு பானமென்றே பரிந்துரைத்தோம்; தம்மிக்க பண்டாரவின் பானம் தொடர்பில் சிசிர



(கொழும்பு)

தம்மிக்க பண்டார என்ற நபரால் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பு பானத்தை "போசணை நிறைந்த ஆயுர்வேத பானம்" என்ற அடிப்படையிலேயே நாம் பரிந்துரை செய்தோம்.

எனினும் அது உரிய மருத்துவ மற்றும் இரசாயனப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே மருந்துப்பொருளாக அறிவிக்கப்படும் என சுதேச வைத்திய முறை மேம்பாடு மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

இது குறித்து இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேலும் கூறியிருப்பதாவது, நான் அதனை அருந்துவதற்கு சபாநாயகருக்கு மாத்திரமே அழைப்பு விடுத்தேன். ஒட்டு மொத்த பாராளுமன்றத்திற்கும் அதனை வழங்கவில்லை.

அத்தோடு போசணை நிறைந்த ஒரு ஆயுர்வேத பானம் என்ற அடிப்படையிலேயே நாம் அதனை வழங்கினோம்.

எமது உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஆயுர்வேத பானங்கள் மற்றும் உணவுகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் தேவையற்ற அச்சத்தை விதைத்து வருகின்றனர்.


ஆனால், அவ்வாறு அச்சப்படுவதற்கான எந்தவொரு அவசியமும் இல்லை.

அந்த ஆயுர்வேத பானம் உரிய மருத்துவ மற்றும் இரசாயனப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே மருந்தாக மாறும்.

அதற்கு குறித்தவொரு காலம் அவசியமாகும். அத்தோடு தம்மிக்க பண்டார மாத்திரமன்றி எமது நாட்டிலுள்ள மேலும் பல ஆயுர்வேத நிலையங்களும் மருத்துவர்களும் தமது உற்பத்திகளை எம்மிடம் கையளித்திருக்கிறார்கள்.

அவை தொடர்பிலும் நாம் விசேட கவனம் செலுத்துவோம் என்றார். (ஜ-4)

# ஏமாற்ற வேண்டாம்; 1000 ரூபாவை வழங்குங்கள்



(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றாமல் அவர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி மஸ்கெலியாவில் நேற்று அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பெருந்தோட்ட தொழிற்சங்கப் பிரிவான, அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கமே இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தது.

சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட பிரமுகர்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றி விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஜ-4)

# கப்பல் சேவைத் தொகுதி திருகோணமலையில் திறப்பு

(கொழும்பு)

ஆழ்கடல் கண்காணிப்புக்கான கப்பல் சேவைத் தொகுதி, திருகோணமலையில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில், கடற்படைக்கு சொந்தமான கப்பற்றுறை வளாகத்திலேயே குறித்த தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வு, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவின் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த தொகுதியில், உதிரிப்பாகங்கள் களஞ்சியப்படுத்தற் பிரிவு, பொறியியல் பிரிவு, மின் பழுது பார்க்கும் பிரிவு மற்றும் பராமரிப்பு பிரிவு என்பன உள்ளடங்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ)

# எரிக்கப்படும் கொரோனா சடலங்கள் எதிர்ப்பு தெரிவித்து லண்டனில் போராட்டம்

(லண்டன்)

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில், உயிரிழக்கும் முஸ்லிம்களின் கட்டாய தகனங்களுக்கு எதிராக லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் முன் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தின் போது ஏராளமானோர் உயர்ஸ்தானிகராலயத்திற்கு வெளியே கூடி பதாகைகளை ஏந்தி போராடினர்.

கொழும்பில் அதிகாரிகளால் தகனம் செய்யப்பட்டவர்களில் 20 நாள் குழந்தையின் படங்களையும் போராட்டக்காரர்கள் இதன்போது காட்சிப்படுத்தியிருந்தனர்.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தகனங்களை கட்டாயப்படுத்த இலங்கை அரசு எடுத்த முடிவு குறித்து அக்கறை இருப்பதாக பிரித்தானிய அரசு முன்னதாக கூறியிருந்தது.

மேலும் இது இலங்கை முஸ்லிம்கள் மற்றும் பிற நம்பிக்கை சமூகங்களுக்கு ஏற்படுத்தும் குறிப்பிட்ட தாக்கத்தை அங்கீகரிக்கிறது.

தெற்காசிய இராஜாங்க அமைச்சரும், மனித உரிமைகளுக்கு பொறுப்பான அமைச்சருமான அஹ்மத், இது குறித்து நேரடியாக இலங்கை உயர்ஸ்தானிகரிடம் கவலை தெரிவித்துள்ளார். (ஜ)

# எயார்லைன்ஸ் சேவைகள் மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், கட்டுநாயக்க மற்றும் சிங்கப்பூர் இடையேயான விமானங்களின் எண்ணிக்கையை வாரத்திற்கு 3 ஆக உயர்த்த இலங்கை எயார்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தவிர கட்டுநாயக்க - மலேசியாவின் கோலாலம்பூருக்கிடையேயான வாராந்திர விமான சேவையை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விமானங்கள் தொடர்புடைய விமான போக்குவரத்து கட்டுப்பாடுகள் மற்றும் தொடர்புடைய நாடுகளால் விதிக்கப்பட்ட எல்லை மூடல்களுக்கு உட்பட்டு இயங்கும்.

இலங்கை எயார்லைன்ஸுடன் இந்த இடங்களுக்கும் அதற்கு அப்பாலும் பயணிக்க விரும்பும் பயணிகள் கொழும்பு, காலி மற்றும் கண்டியில்உள்ளவிமான நிறுவனத்தின் டிக்கெட் அலுவலகங்களிலிருந்து அல்லது தங்களுக்கு விருப்பமான பயண முகவர் மூலமாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம்.

மேலும் தகவலுக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உலகளாவிய தொடர்பு மையத்தை +9411 7771979 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது www.srilankan.com என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும் என மேலும் அறிவித்துள்ளது. (ஜ)

# பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு விவகாரம்; ஜனாதிபதி, பிரதமரின் முரண்பட்ட கருத்துக்கள்

## மின்சாரத்துறை வல்லுநர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பொதுப்பயன்பாட்டு** ஆணைக்குழு சட்டத்தையும் மின்சார சபை சட்டத்தையும் துரித கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவான விதத்தில் திருத்தி அமைப்பதற்கு முன்மொழிவதாக 2021 வரவு - செலவுத் திட்ட உரையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

எனினும் அந்த முன்மொழிவை புறக்கணிக்கும் வகையில் ஜனாதிபதி செயலாளர் ஜனாதிபதியின் ஆலோசனையுடன் ஆணைக்குழுவை மூடுவதற்குரிய தன்னிச்சையான தீர்மானத்தை தெரிவித்திருப்பது ஜனாதிபதி மற்றும் பிரதமரின் முரண்பட்ட கருத்துக்களை காண்பிப்பதாக மின்சாரத்துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டின் மின்சாரத்துறையில் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களை மையமாகக் கொண்டு மேற்கொண்டு வருகின்ற சுயாதீன ஆணைக்குழுவாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இருக்கிறது.

இந்தக் குழுவை மூடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலாளரினால் திறைசேரியின் செயலாளருக்கு கடந்த முதலாம் திகதியிடப்பட்ட கடிதமொன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன.

அதனைத் தொடர்ந்து, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை பதவி விலகுமாறு திறைசேரியின் செயலாளரினால் தொலைபேசியினூடாக தெரிவிக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகிய அன்றைய தினமே இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் தங்களது இராஜினாமாக் கடிதங்களை அமைச்சுக்கு அனுப்பி வைத்ததாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த விடயத்தை இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பேச்சாளரும் உறுதிப்படுத்தினார்.

தனது இராஜினாமா கடிதத்தை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் ஐவருக்கு பதிலாக ஆணைக்குழுவுக்கான புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கே உண்டு. இது தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 35 ஆவது இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டத்தில் 1 (1), 3 (1) 4, 6 (1), 6 (4), ஆகிய பிரிவுகள் தெளிவாக குறிப்பிட்டுள்ளன.

அந்த வகையில் தற்போது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிதியமைச்சின் கீழ் இருக்கின்ற நிலையில் அமைச்சிற்கு பொறுப்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆணைக்குழு உறுப்பினர்களை அரசியலமைப்பு பேரவையின் ஒருமைப்பாட்டுடன் நியமிக்க வேண்டியவராக உள்ளார்.

குறித்த வெற்றிடங்களை சமர்ப்பித்து ஒரு மாத காலத்துக்குள் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். (ஜ)

# கொரோனா தொடர்பில் உண்மை நிலையை கூறுங்கள்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தற்போது சமூகமயமாகியுள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது சமூகத்திற்குள் உப பரவல்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

நாட்டில் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையில் எந்தவொரு குறைவும் இதுவரையில் ஏற்படவில்லை. நாட்டின் பல இடங்களில் பரவல்கள் உருவாகியுள்ளன. தற்போதைய உண்மை நிலை என்ன என்பது நாட்டு மக்களுக்கு அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டும்.

யார் மீதும் குற்றம் சுமத்த முடியாத நிலை இது. அதிக பரவலின் துரதிர்ஷ்ட நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

நாட்டின் உண்மையான நிலைமையை மக்கள் அறிந்திருக்க வேண்டும். அது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# போலித் தகவல்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறை

## மீண்டும் எச்சரிக்கும் ரோஹண

(கொழும்பு)

பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்படுபவர்கள் பொய்யான தகவல்களை வழங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

எனவே பிழையான தகவல்களை குறிப்பாக ஏனையவர்களின் தகவல்களை வழங்குவது தண்டனைக்குரிய குற்றம். அதற்காக மூன்று வருட சிறைத்தண்டனையைக் கூட விதிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொய்யான தகவல்களை வழங்குபவர்களை தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தண்டிக்கலாம். பி.சி.ஆர்.சோதனைகளிற்கு தங்களை உட்படுத்தாத பலர் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு நடந்துகொள்பவர்கள் வேண்டுமென்றே வைரஸினை பரப்புபவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களை குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் அச்சப்பட தேவையில்லை என தெரிவித்துள்ள பேச்சாளர் சுகாதாரப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (ஜ)

கண்ணீர் அஞ்சலி



அமரர் முத்துக்குமாரசாமி
திருஞானசம்பந்தப்பிள்ளை

அவர்கள் எமது மன்றத்தின் ஆரம்ப காலத்தில் இருந்து சைவ ஆலோசகராகவும் உப தலைவராகவும் மன்ற வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர். அன்னாரின் சைவசித்தாந்த வகுப்பில் கல்வி பயின்ற மாணவர்களில் சிறியேனும் ஒருவன். அவரின் ஆத்மா சிவபதப் பேறில் திளைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

செயலாளர், அகில இலங்கை திருமுறை மன்றம்,
யாழ்ப்பாணம்.

(4952)

# பயிர் அழிவுகளை பதிவு செய்யவும்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கால போக நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வெள்ள அனர்த்தத்தால் பயிர் அழிவைச் சந்தித்த விவசாயிகள் நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பயிர் அழிவு தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள முடியும் என கமக்கார அமைப்பு தெரிவித்துள்ளது.

பதிவுகளை குறித்த தினத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை எழுதுமட்டுவாழ் சந்தை வளாகத்தில் மேற்கொள்ள முடியும். அத்துடன் எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு அண்மையில் பெய்த கனமழை காரணமாக பயிர்கள் அழிவடைந்திருப்பின் அவர்களும் அன்றைய தினத்தில் பயிர் அழிவு தொடர்பான பதிவுகளை மேற் கொள்ள முடியும் என கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (5-4-30)

# வீதிகளுக்கு அடிக்கல் நாட்டல்



(சாவகச்சேரி)

நிறைவான கிராமம் (சப்ரிகம) திட்டத்தின் ஊடாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நான்கு வீதிகளின் திருத்தங்களுக்கான அடிக்கல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நாட்டி வைக்கப்பட்டது.

கிராமமட்ட அமைப்புக்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.

நாவற்குழி கிழக்கு ஜே/295 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பூதவராயர் வீதி, கைதடி கிழக்கு ஜே/289 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொத்தா கூடல் வீதி, அல்லாரை ஜே/322 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அறுகம்புலப் பிள்ளையார் வீதி மற்றும் கச்சாய் ஜே/324 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கச்சாய் அம்மன் ஆலய வீதி ஆகியனவே குறித்த திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டன.

மேலும் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.'

எட்டு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த நான்கு வீதிகளும் அமையப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-4-30)



கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று கீரிமலையில் நடைபெற்றது. வலி. வடக்கு பிரதேச சபையின் வாகனம் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டன. இதில் வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:- ரவிசாந்)

# வரும் வரவு - செலவுத் திட்டத்தில் கிராமிய பொருளாதாரம் உள்ளடக்கப்படும்

## அங்கஜன்

(சாவகச்சேரி)

வருகின்ற வரவு-செலவுத் திட்டம் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற வீதிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவான கிராமம்வேலைத் திட்டத்தின் ஊடாக கிராமங்களில் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த தேவைப்பாடுடைய அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்களுடைய முன்மொழிவுகளே ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு தற்போது அவை வரவு-செலவுத் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

வருகின்ற வரவு-செலவுத் திட்டமானது கிராமிய பொருளாதாரம் மற்றும் கிராமிய அபிவிருத்தி ஆகியவற்றை கட்டியெழுப்பக்கூடிய வரவு-செலவுத் திட்டமாக அமையும்.

வரவு-செலவுத் திட்டத்தினை அமுல்படுத்த மீண்டும் வேலைத்திட்டங்களுடன் கிராமம் தோறும் வருவோம். அவ்வாறு கிராமத்திற்கு வந்து அந்த கிராமத்திற்கு பொருத்தமான அபிவிருத்தி எதுவென அறிந்து அதனை மக்களின் சம்மதத்துடன்நடைமுறைப்படுத்துவோம்.

எனவே மக்களின் ஒத்துழைப்பு கிராம அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் உறுதுணையாக அமைய வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)



வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு எழுதுமட்டுவாழ் தெற்கு ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் தங்கியுள்ள 14 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேருக்கு கொடிகாமம் ஒட்டங்கேணி சனசமூக நிலையத்தினால் நுளம்பு வலை, குழந்தைகளுக்கான பால் மா, பிஸ்கட் மற்றும் நுளம்புத்திரி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வைத்துள்ளது.

(படம்:- சுபேசன்)

# கடந்த கால தவறுகள் தான் வெள்ளம் தேங்கக் காரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை கடந்த காலங்களில் விட்ட தவறே வெள்ள அனர்த்தங்களின்போது வீதிகளை வெட்டி வெள்ளம் கடத்த வேண்டிய தேவை ஏற்படக் காரணம் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் குளங்களுக்கான வடிகாலமைப்பு கட்டாயம் செய்யப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் வீதி அமைப்பின் போது தேவையான இடங்களில் நீர் வடிந்தோடும் குழாய்கள் வைக்கப்படவில்லை.

இந்தத் தவறுகள் தான் தற்போது நீரைக் கடத்த வீதியை வெட்ட வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

கீரிமலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையமும் கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் இணைந்து நடத்துகின்ற விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

(படம்:- தவசீலன்)



# மோ.சைக்கிள்கள் விபத்து

## ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா நகரிலிருந்து குருமன்காடு சந்தி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் குருமன்காட்டு சந்தியிலிருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் வைரவப் புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தினை அண்மித்த பகுதியில் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இவ் விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

# சேவை நலன் பாராட்டு



திருமதி.

## தபோநிதி காயாரோகணன் (பிரதி அதிபர்)

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 - கலைப் பட்டதாரி (தமிழ்)
(1982.04.21 - 2020.12.13 வரை)

### சேவை விபரம்

மு/யோகபுரம் மகா வித்தியாலயம் :- 1982.04.21 - 1997.12.31
யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை :- 1998.01.01 - 2010.06.13
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை:- 2010.06.14 - 2020.12.13



சைவமும் தமிழும் தழைத்து ஓங்க – எம்
வித்தியாசாலையை மேம்புற வைத்தீர்
அன்பின் விருட்சம், ஆற்றலின் உறைவிடம்
மௌனப் பெட்டகம், பொறுமையின் இலக்கணம் – தங்கள்
புன்னகைப் பூவால் கோபத் தீ அணைத்து
கலைமகள் கடாட்சம் கை வரப் பெற்றீர்
சொல்லும் செயலும் ஒன்றாய்ப் பொருந்தும்
ஆசிரியத்தின் அற்புதச் சிற்பி – நீங்கள்
பல்லாண்டு காலம் சீரோடு வாழ
இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.




பாடசாலைச் சமூகம், யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

(4947)



## 2021 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை 16.12.2020 தொடக்கம் 29.12.2020 வரை வைத்தியசாலையில் உள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 வரை பின்வரும் கொடுப்பனவுகளைச் செலுத்தி கேள்வி பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 1000.00 | 10000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 30.12.2020 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் நேரடியாக மீளளிப்பு தொகையினை செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். குறித்த திகதி, நேரத்தின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் திரு.கந்தசாமி முருகவேல், தலைவர், நோயாளர் நலன்புரிசங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடதுபக்க மேல் மூலையில் 2021 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகை வழங்குவதற்கான கேள்வி கோரல் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சகல கேள்விப் பத்திரங்களும் 31.12.2020 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கேள்வி சபை முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமுகமளித்தல் வேண்டும். தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது. (C-900)

திரு.கந்தசாமி முருகவேல்,
தலைவர், நோயாளர் நலன்புரி சங்கம்,
மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.



## வேலணை பிரதேச சபை

### பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத நாம்பன் கட்டாக்காலி கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம்:- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம்:- 15.12.2020 செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்ல வேண்டும்.

(C-896)

தொடர்புகளுக்கு:-
021 221 1505

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.


# அசமந்தப் போக்கே காரணம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கதலுக்கு முன் தீவிரவாதம் தொடர்பாக பாதுகாப்புத் தலைவர்களின் செயற்பாடு மிக அசமந்தமான நிலையில் இருந்துள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியொருவர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த நல்லாட்சியின் போது பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கப்படவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்



குழுவில் நேற்று முன்தினம் சாட்சியமளிக்கையிலேயே குறித்த அதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ)

# அம்பகமுவவில் அதிக தொற்றாளர்கள்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை அடையாளம்காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 254 ஆக அதிகரித்துள்ளது.

மேற்படி தொற்றாளர்களிடையே அதிகமானோர் அம்பகமுவ சுகாதாரப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, அம்பகமுவ பகுதியில் இதுவரை 117 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனரென சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

(நெளுக்குளம்)

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினருக்கு வவுனியா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட் திணைக்களமும், நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்த ஒக்டோபர் மாதம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது ஆலயத்தின் சார்பில் தலைவர் சசிகுமார், செயலாளர் தமிழ்செல்வன், பூசகர் மதிமுகராசா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

நீதிமன்றில் ஆஜராகியிருந்த பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரை கைது செய்ய வேண்டும் என்றும். தொல்பொருள்கள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை ஆலய நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்றும் நீதவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

எனினும் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் ஆலய நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டதுடன் நவம்பர் 6 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த நவம்பர் 6 ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றில் மீண்டும் ஆஜராகிய நிலையில் கொவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக அநேகமான வழக்குகள் விசாரணைகளிற்கு அழைக்கப்படாமல் தவணை இடப்பட்டிருந்தது.

அந்தவகையில் 2021 ஆம் வருடம் தை மாதத்திற்கு வழக்குகள் ஒத்தி வைக்கப்பட்டன.

இந்நிலையில் வழக்கினை முன்னமே அழைக்குமாறு தொல்பொருட் திணைக்களம் மற்றும் பொலிஸார் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகளால் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட, நிலையில் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு வழக்கு அழைக்கப்பட்டது.

எனினும் வழக்கின் திகதி மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் தமக்கு தெரியப்படுத்தவில்லை என்றும் இதனால் தாம் அன்றையதினம் நீதிமன்றிற்கு சமுகமளிக்கவில்லை என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். அவர்கள் ஆஜராகாமையால் ஆலய நிர்வாகத்தினருக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (5-4-299-250)

# வவுனியா ஆசிகுளம் கிராம மக்களை சந்தித்தார் கஜேந்திரன்



(நெளுக்குளம்)

வவுனியா ஆசிகுளம் கிராம மக்களை பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சந்தித்து கலந்துரையாடினார்.

ஆசிகுளம் கிராம மக்களின் பூர்வீகக் காணிகளை வனவளத் திணைக்களத்தினர் தமக்கு சொந்தமான காணி என கூறி எல்லைப்படுத்தியுள்ள நிலையில், அதனை பார்வையிடுவதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர் அங்கு சென்றிருந்தார்.

ஆசிகுளம் கிராம மக்கள் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிட்ட காணியினை துப்புரவு செய்து பராமரித்து வந்த நிலையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாக பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளன.

தற்போது அதனை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்ள முற்பட்டபோது வனவளத் திணைக்களத்தினர் இக்காணி வனவளத் திணைக்களத்திற்கு சொந்தமானது எனக் கூறி தடுத்து நிறுத்தியதோடு அக்காணிக்குள் மீள் காடு உருவாக்கலுக்கான மரங்களையும் நாட்டியுள்ளதாக அப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கிணறுகள் வெட்டப்பட்டு நீண்டகாலமாக பராமரிக்கப்பட்டு வந்த தமது காணிகளுக்குள் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் விவசாயத்தினை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் குறித்த மக்களை சந்திப்பதற்காக அங்கு சென்றிருந்தார்.

குறித்த காணியை நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மக்களிடமுள்ள அவர்களது ஆவணங்களை பார்வையிட்டார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில்,

வனவளத் திணைக்களத்தின் இச்செயற்பாடானது அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற இன அழிப்பு செயற்பாட்டின் மற்றுமொரு வடிவமாகவே இது அமைந்துள்ளது என குறிப்பிட்டார்.

இதன்போது சட்டத்தரணி சுகாஸ், பிரதே சபைகளின் உறுப்பினர்களான செல்வநாயகம், சஞ்சுதன் உட்பட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களும் வருகை தந்திருந்திருந்தனர். (5-4-299)

# வெளிநோயாளர் கொட்டகை திறந்து வைக்கப்பட்டது

(நெளுக்குளம்)



வவுனியா வர்த்தக சங்கத்தினால் வவுனியா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட வெளிநோயாளர்கள் கொட்டகை கடந்த வெள்ளிக்கிழமை வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமாரினால் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா வர்த்தக சங்கத்தினால் வவுனியா வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீருக்கான இணைப்புக்களும் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமார், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், வர்த்தக சங்க செயலாளர் அம்பிகைபாகன் மற்றும் வர்த்தக சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வெளிநோயாளர்களிற்கான கொட்டகையானது வவுனியா வர்த்தக சங்கத்தினால் வவுனியாவில் உள்ள வர்த்தகர்களின் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# சுய தொழில் முயற்சியாளருக்கு பலரும் பாராட்டு



(பனிக்கன்குளம்)


பெண் தலைமைத்துவ குடும்பமாக இருந்தும் பலருக்கு முன்னுதாரணமாக சாதித்து காட்டும் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பகுதியில் வசித்துவரும் சாயிராணியின் சதுஸ்ரார் உற்பத்தி விற்பனை நிலையத்தை முல்லைத்தீவு மற்றும் மற்றும் கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள் இணைந்து திறந்து வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு 10ம் வட்டாரம் பகுதியில் சிறுதொழில் முயற்சியாகதன்னுடைய தொழில் முயற்சியை ஆரம்பித்து பின்பு பல்வேறு முன்னேற்றத்தை அடைந்து தனது உற்பத்திகளுக்கு இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் ஒரு அங்கீகாரத்தை பெற்றதோடு பலராலும் பாராட்டப்பட்டு பல விருதுகளையும் பெற்றார்.


அயராத முயற்சியின் பயனாக முல்லைத்தீவு பரந்தன் வீதியில் சுமார் ஒரு கோடிக்கு மேற்பட்ட முதலீட்டில் உற்பத்திசாலையையும் விற்பனை நிலையத்தையும் அமைத்திருந்தார்.

இவ்வாறு அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து கடந்த புதன் கிழமை திறந்து வைத்தனர்.

ஒரு தொழில் முயற்சியாக ஆரம்பித்து இன்று ஒரு பாரிய தொழிற்சாலையாக மட்டுமன்றி பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகுடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பையும் வழங்கியுள்ளார். இவ்வாறான ஒரு நிலைக்கு வந்துள்ள இந்த பெண்ணின் சாதனைகளை பலரும் பாராட்டியுள்ளனர். (5-4-281)



மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் காதர் மஸ்தான் நேற்று முன்தினம் சனிக்கிழமை புரேவி புயலினால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். (படம்- ஜோசப் நயன்)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள சமுர்த்தி வங்கி கணனி மயமாக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

## இராசிபலன்

14.12.2020
கார்த்திகை 29, திங்கட்கிழமை
அமாவாசை முன்னிரவு 10.40 மணிவரை
கேட்டை பின்னிரவு 12.36 மணிவரை
சுபநேரம் 12.21-1.51 மணிவரை
இராகுகாலம் 7.51-9.21 மணிவரை
சந்திராஷ்டமம் பரணி, கார்த்திகை
அமாவாசை விரதம்

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மற்ற வர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும்.

**ரிஷபம்:** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் குறையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நாள், விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேரலாம், வியாபார விருத்தி ஏற்படும் நாள், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**சிம்மம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வழிபாடு முன்னேற்றம் தரும், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** என்றோ நடக்குமென நினைத்த காரியம் இன்று நடைபெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** தடைகள் விலகி தனவரவு கிடைக்கும், திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.

சந்தேகம் தங்குமிடம் தவறு உள்ள நெஞ்சம் ஆகும்

# புகையிரத திணைக்கள சேவையில்

# 8 ஆயிரம் தொழில் வெற்றிடங்கள்

**(கொழும்பு) புகையிரத திணைக்கள சேவையில் 8 ஆயிரம் தொழில் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவற்றில் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகள் சேவையில் மாத்திரம் 366 வெற்றிடங்கள் காணப்படுவதாக புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.**




புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

புகையிரத சேவையில் காணப்படும் குறைபாடுகளுக்கு தீர்வு காண புகையிரத திணைக்களம் உரிய நடவடிக்கைகளை இதுவரை முன்னெடுக்கவில்லை. புகையிரத திணைக்களத்தில் தற்போது 23 ஆயிரம் பேர் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். இருப்பினும் 8 ஆயிரம் சேவை பிரிவுகளுக்கு இன்னும் வெற்றிடம் நிலவுகிறது.

இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். படித்த இளைஞர்களை புகையிரத சேவையில் இணைத்துக் கொள்ள உரிய நடவடிக்கைகளை புகையிரத திணைக்களம் இதுவரை முன்னெடுக்கவில்லை.

புகையிரத திணைக்களத்தில் 9 சேவைப்பிரிவுகள் காணப்படுகின்றன. புகையிரத உப போக்குவரத்து திணைக்கள சேவையில் 3 ஆயிரம் வெற்றிடங்களும், புகையிரத நிலைய துய்மைப்படுத்தல் சேவை பிரிவில் 320 வெற்றிடங்களும் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சேவையில் 366 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதார தரப்பினர் அறிவுறுத்தியுள்ள சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை புகையிரத சேவையில் முழுமையாக செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. குறைவான சேவையாளர்களைக் கொண்டு புகையிரத சேவையை வினைத்திறனாக முன்னெடுக்க பல தடைகள் காணப்படுகின்றன.

புகையிரத சேவையில் படித்த இளைஞர்களை விரைவில் இணைத்துக் கொள்ள புகையிரத திணைக்களம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)


## மணிவிழா வாழ்த்து

திருமதி.
**வள்ளியம்மைப்பிள்ளை கார்த்திகேசு**

(பகுதித் தலைவர் – ஆரம்பப்பிரிவு) SLTS - I யா/புற்றளை மகா வித்தியாலயம்

ஆரம்ப இடை நிலை, உயர்தரக் கல்வி - யா/வரணி மத்திய கல்லூரி
உயர்கல்வி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (பொது கலைமாணி B.A)
தொழில் தகைமை - பட்டப்பின் கல்வி டிப்ளோமா (தேசிய கல்வி நிறுவகம்)

சேவை விபரம்

மமா/அம்ப/நோர்வூட் தமிழ் மகா வித்தி –
20.01.1989 – 31.12.1991 (ஆசிரியர்)
01.01.1992 – 11.02.1997 (உதவி அதிபர்)
கிளி/புன்னை நீராவி வித்தியாலயம் –
12.02.1997 – 31.12.1998 (ஆசிரியர்)
01.01.1999 – 31.12.2002 (உதவி அதிபர்)
கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை –
01.01.2003 – 31.12.2004 (ஆசிரியர்)
யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் –
01.01.2005 – 31.12.2008 (ஆசிரியர்)
யா/புற்றளை மகா வித்தியாலயம் –
01.01.2009 – 31.12.2018 (ஆசிரியர்)
01.01.2019 – 15.12.2020 (பகுதித் தலைவர்)

ஆசிரியப் பணி தனில் அர்ப்பணிப்பாய் சேவையாற்றி
மாணவர் மனங்கள் மகிழ்வாய் அமைந்திட – நாளும்
எம் பள்ளி தனிலே நெகிழ்வாய் பணியாற்றினீர்
பகுதித் தலைவர் பணியதை நாளும் பண்புடன் தொடர்ந்தீர் – இனி
இனிதாய் அமைந்த இல்லற வாழ்வு இனிதே நாளும் தொடரட்டும்
நல்லருள் பொழியும் புற்றளையான் இறையருள் வாழ்வு தொடர
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம். (C-898)



வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச் சங்கம், புற்றளை மகா வித்தியாலயம்.

# பயங்கரவாத தாக்குதலை நடத்த திட்டமிட்ட தீவிர இடதுசாரி குழு கைது

(பாரிஸ்)

**பிரான்ஸ் முழுவதும் பயங்கரவாத தாக்குதல்களை நடத்த சதித்திட்டமிட்ட 'வன்முறைவாத தீவிர இடதுசாரி ஆர்வலர்கள் குழு' கைது செய்யப்பட்டுள்ளதாக பிரான்ஸ் நாட்டின் உள்துறை அமைச்சர் ஜெரால் டார்மனின் அறிவித்துள்ளார்.**




பிரான்ஸில் தொடர்ச்சியான குண்டுவெடிப்புகளை நடத்தவும், நகரங்களின் தெருக்களில் பயங்கர தாக்குதல்களை நடத்தவும் திட்டமிட்டதாகக் கூறப்படும் தீவிர இடதுசாரி குழுவைச் சேர்ந்த 7 பேரை அதிகாரிகள் கைது செய்ததாக பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த குழு பொலிஸ் படைகளையும் தாக்க திட்டமிட்டுள்ளதாக சில ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

மொத்தம் 9 பேர் கைது செய்யப்பட்டதாகவும், பின்னர் அதில் இருவர் விடுவிக்கப்பட்டதாக பிரான்ஸ் ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் குழுவின் தலைவரும் அடங்குவார், அக்குழுவின் தலைவர் புளோரெயின் டீ என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புளோரெயின் டீ, 2017ல் சிரியாவின் ரோஜாவாவில் குர்திஷ் படைகளுக்காக 10 மாதங்கள் போராடியதாகவும், 2018 ஜனவரியில் பிரான்சுக்கு திரும்பியதாகவும் கூறப்படுகிறது.

'பயங்கரவாத குழுவை' உருவாக்கியதாக சந்தேகித்து, அவரது நடவடிக்கைகளை பொலிஸார் கண்காணித்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டபோது, பயங்கர ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை பொலிஸார் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடத்த பிரான்ஸ் நீதிமன்றம் ஒப்புதல் அளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4)

# நைஜீரியாவில் துப்பாக்கிப் பிரயோகம்; நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் மாயம்


(நைஜர்)

நைஜீரியாவில் பாடசாலையொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் அங்கு கல்வி கற்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் காணாமல்போயுள்ளனர்.

வடமேற்கு நைஜீரியாவின் கற்சினா மாநிலத்தில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், நைஜீரிய ஜனாதிபதி முகமது புஹாரி குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு தமது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன், காணாமல் போன மாணவர்களை கண்டறியும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (4)

# பாதி இந்தியா பட்டினி கிடக்கையில் இது தேவையா? - கமல் கேள்வி



(சென்னை)

டில்லியில் புதிய பாராளுமன்றம் கட்டும் பணிக்கு எதிராக மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் கருத்து தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் நேற்று தனது முதற்கட்ட தேர்தல் பிரசாரத்தை மதுரையில் இருந்து ஆரம்பித்தார்.

பிரசாரத்திற்கு புறப்படுவதற்கு முன்னர் கமல் நேற்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், புதிய பாராளுமன்றம் கட்டும் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கமல் வெளியிட்ட டுவிட்டர் பதிவில், சீனப்பெருஞ்சுவர் கட்டும் பணியில் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து போனார்கள். மக்களைக் காக்கத்தான் இந்தச் சுவர் என்றார்கள் மன்னர்கள். கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்து பாதி இந்தியா பட்டினி கிடக்கையில், ஆயிரம் கோடியில் பாராளுமன்றம் கட்டுவது யாரைக்காக்க?

பதில் சொல்லுங்கள்? என் மாண்புமிகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரே என குறிப்பிட்டுள்ளார். (4)

# ஈரானிய ஊடகவியலாளர் தூக்கிலிடப்பட்டார்



(டெஹ்ற்ரான்)

2017ஆம் ஆண்டு அரசாங்க எதிர்ப்பு போராட்டங்களின் போது வன்முறையைத் தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்ட ஈரானிய ஊடகவியலாளர் ருஹொல்லா சேம் தூக்கிலிடப்பட்டார் என ஈரானின் அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது

பல ஆண்டுகளாக நாடு கடத்தப்பட்ட பின்னர் 2019ஆம் ஆண்டில் சிறைபிடிக்கப்பட்ட சேமின் மரண தண்டனையை ஈரானின் உச்ச நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உறுதி செய்தது.

ஈரானிய உச்ச நீதிமன்றம் அவருக்கு எதிரான மரண தண்டனையை உறுதிசெய்த நான்கு நாட்களுக்கு பின்னர் அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை தூக்கிலிடப்பட்டார்.

உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை பிரான்ஸ், மனித உரிமைக் குழுக்கள் மற்றும் எல்லைகள் இல்லாத நிருபர்கள் கடுமையாக எதிர்த்துள்ளன. (4)

# ஜீப்-லொறி மோதல் 10 பேர் உயிரிழப்பு

(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கர் மாவட்டத்தில் நிகழ்ந்த வாகன விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கர் மாவட்டம் நிகு ம்ப் அருகே நேற்று முன் தினம் இரவு ஜீப்பும், லொறி யும் மோதி விபத்துக்குள்ளாகின.

இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் காயங்களுடன் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் அடுத்தடுத்து 6 பேர் உயிரிழந்தனர்.

இதனால் பலி எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது.

இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (4)

# உச்ச நீதிமன்றமும் கைவிட்டு விட்டது

## ட்ரம்ப் கடும் அதிருப்தி

(வோஷிங்டன்)

தேர்தல் முடிவுகளை எதிர்த்து டொனால்ட் ட்ரம்ப் தாக்கல் செய்த வழக்குகளை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ள நிலையில் உச்ச நீதிமன்றமும் தம்மை கைவிட்டு விட்டதாக ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடன் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ளார்.

எனினும், தேர்தலில் மிகப் பெரிய முறைகேடு நடந்திருப்பதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார். பல்வேறு மாகாணங்களில் தேர்தல் முடிவுகளை எதிர்த்து டொனால்ட் ட்ரம்ப் தரப்பில் நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டன. ஆனால், எல்லா நீதிமன்றங்களுமே ட்ரம்பின் வழக்குகளை நிராகரித்துவிட்டன.

இந்த வரிசையில், டொனால்ட் ட்ரம்ப் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றமும் நிராகரித்துள்ளது. இதனால் டொனால்ட் ட்ரம்பும், அவரது ஆதரவாளர்களும் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

ஜோர்ஜியா, மிச்சிகன், விஸ்கான்சின், பென்சில்வேனியா ஆகிய நான்கு மாகாணங்களின் தேர்தல் முடிவுகளை இரத்து செய்யக்கோரி உச்ச நீதிமன்றத்தில் டொனால்ட் ட்ரம்ப் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில், ட்ரம்பின் வழக்கை உச்ச நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.


இன்னும் சொல்லப்போனால், உச்ச நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளை நியமித்ததே டொனால்ட் ட்ரம்ப்தான். ஆனால், ட்ரம்பை உச்ச நீதிமன்றம் கைவிட்டதால் அவர் அதிருப்தியில் உள்ளார்.

இதுகுறித்து டொனால்ட் ட்ரம்ப் டுவிட்டரில், "உச்ச நீதிமன்றம் நம்மை கைவிட்டு விட்டது. ஞானமும் இல்லை, தைரியமும் இல்லை" என்று தெரிவித்துள்ளார். மாகாண நீதிமன்றங்கள் முதல் உச்ச நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களும் ட்ரம்பின் வழக்குகளை இரத்து செய்வதால் அவரது ஆதரவாளர்கள் அதிருப்தியில் உள்ளனர். (4)

# அலுவலகங்களில் குழுவாக உணவருந்துவதால் கொரோனா வைரஸ் பரவும் அபாயமுண்டு

## பொலிஸார் எச்சரிக்கை

**(கொழும்பு)**
**அலுவலகங்களிலோ அல்லது வேலைத் தளங்களிலோ குழுவாக ஒன்றுகூடி உணவருந்துவதனால் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உண்டு என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.**



அலுவலகங்களில் குழுவாக ஒன்றாக சாப்பிடுவதும், புகைப்பதும் கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தை ஏற்படுத்துகிறது என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும்பாலான மக்கள் அலுவலகம் அல்லது பணியிடத்திற்கு செல்லும் வழியில் முகக்கவசம் அணிந்தாலும், மதிய உணவு சாப்பிடும்போது அல்லது புகைப்பிடிக்கும் போது முகக்கவசத்தை அகற்றுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக பெரிய குழுக்களாக கூடி சாப்பிட்டு ஒரே மதிய உணவைப் பகிர்ந்து கொள்ளும்போது அல்லது ஒரே கண்ணாடி குவளையில் தண்ணீர் குடிக்கும்போது இது ஒரு பெரிய ஆபத்தை ஏற்படுத்துகிறது.

"இது போன்ற நிகழ்வுகளில் வைரஸ் பரவியிருப்பதை சுகாதார அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்," என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பண்டிகை காலங்களில் ஒன்றுகூடல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் போது மற்றும் ஒன்றுகூடும் போதும் பொதுமக்கள் இதை மனதில் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பொதுமக்கள் தங்களின் குடியிருப்பு நகரங்களுக்கு வெளியே செல்லும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு மக்கள் பயணித்ததன் விளைவாக சில பகுதிகளில் துணைக் கொத்தணிகள் உருவாகிய சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# டிப்பர் வாகன விபத்து இருவர் படுகாயம்



(கொழும்பு)
ஹற்றன்-மஸ்கெலியா பிரதான வீதியின் நோர்வூட் நிவ்வெளிகம பகுதியில் டிப்பர் ரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் டிப்பரில் பயணித்த 2 பேர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

. மஸ்கெலியாவில் இருந்து நோர்வூட் நோக்கிப் பயணித்த டிப்பர் ரக வாகனம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# இருவேறு விபத்து இருவர் பலி

(கொழும்பு)
இரத்தினபுரி மற்றும் கெகிராவை பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டு வாகன விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி கொழும்பு வீதியின் பண்டாரநாயக்க மாவத்தைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 70 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றினை வீதியின் குறுக்காக தள்ளிச் சென்ற போது இரத்தினபுரியில் இருந்து குருவிட நோக்கி பயணித்த லொறி அவர் மீது மோதியுள்ளது.

இதன்போது, படுகாயமடைந்த நபர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு கெகிராவை, தம்புள்ளை வீதியின் சூரியகம சந்திக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கெகிராவையில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இருவர் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார்.

இரு விபத்துக்கள் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# தேங்கிக் கிடக்கும் வழக்குகள் துரித கதியில் விசாரணைக்கு



(கொழும்பு)
நாட்டின் நீதிமன்றங்களில் தேங்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கான வழக்குகளை துரித கதியில் விசாரணை செய்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நீதி அமைச்சு அறிவித்திருக்கிறது.

இந்த விடயத்தை நீதி அமைச்சர் அலிசப்ரி அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா பரவல் நிலைமையை அடுத்து இந்த ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் தொடங்கி ஏனைய நீதிமன்றங்களிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் மெய்நிகர் நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

பெரும்பாலும் இந்த நடைமுறை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைமுறைக்கு வரும். இது தொடர்பான சட்ட வரைவை தற்போது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தயாரித்து வருகின்றனர். (ஜ-4)

# தொல்பொருள் பகுதிக்குச்சேதம்; பத்துப்பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
அநுராதபுரம் - இபலோகம விஜிதபுர கோட்டை இருந்ததாக கருதப்படும் தொல்பொருள் பெறுமதிவாய்ந்த பகுதிக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக வடமத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்றிருந்தனர்.

பள்ளிவாசலையும், மயானப் பகுதியையும் பிரிப்பதற்காக சட்டவிரோதமான முறையில் மதில் ஒன்றை நிர்மாணிப்பதற்கு சிலர் நடவடிக்கை எடுத்தமையினால், அங்கிருந்த தொல்பொருள் பகுதிக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இபலோகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அழகப்பெருமாகமயில் உள்ள பள்ளிவாசலையும், மயானப் பகுதியையும் பிரிப்பதற்காக இந்த மதில் கட்டப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியை அண்மித்தே பெலும்கல என்ற தொல்பொருள் பூமி உள்ள நிலையில், 2018 ஆம் ஆண்டில் அது தகர்க்கப்பட்டது.

இந்த நிலையில் தொல்பொருள் தொகுதிக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று முன்தினம் 10 பேரை கைது செய்துள்ளனர். அவர்களுள் பள்ளிவாசலின் தலைவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் சாதிக்காய்

(கொழும்பு)
வாசனைப் பொருளாகக் கருதப்படும் சாதிக்காயை அதிகளவில் பயன்படுத்துவதில் மனித உடலுக்கு பாதிப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஆய்வுகளை மேற்கொண்டுவந்த வைத்தியர்கள் சாதிக்காயை அதிகளவில் பயன்படுத்துவதால் நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்படுவதாக அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மன ரீதியான உளைச்சலையும் இது ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 10 கிராமிற்கு அதிகமான சாதிக்காய்ப் பாவனையானது மனித உடலைப் பாதிப்படையச் செய்கிறது.

இதன் அதிக பாவனையால் குமட்டல், தலைச்சுற்று போன்றன ஏற்படுவதோடு மனித நரம்பு மண்டலமும் இதனால் பாதிப்படைகிறது.

சாதிக்காயை ஏற்ற அளவில் பாவிப்பதால் இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாமெனவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஜ-4)

## ஜனவரி முதல் பொலிஸாருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்திற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி முதல் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

எனினும் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள பிள்ளைகளின் பெற்றோர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சாதார்ண தரப் பரீட்சை முடிவடையும் வரையில் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.

இவர்களுக்கு மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னரே இடமாற்றம் வழங்கப்படும். பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர ஏனையவர்களுக்கு வழமையைப் போன்றே இடமாற்றம் வழங்கப்படும் என மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## உடல்கள் தகனம்;வலுக்கும் எதிர்ப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதை எதிர்த்து, முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஷாஹிர் மௌலானா வித்தியாசமான முறையில் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பொரளைமயான நுழைவாயிலில் வெள்ளைத் துணிகளைக்கட்டி, தனது எதிர்ப்பை வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சரான அலிஷாஹிர் மௌலானா தனது முகப்புத்தகத்தில் கூறியுள்ளதாவது, "கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடலங்கள் தகனம் செய்யப்படுவதற்கு எதிராக அமைதியான முறையில் பலமான எனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளேன்.

பிறந்து வெறும் 20 நாட்களேயான பாலகன் ஷாயிக் மற்றும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த 100 பேரின் உடல்கள் இங்குதான் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்பட்டன.

ஆகவேதான், நான் எனது முழு எதிர்ப்பையும் இந்த பொரளை மயானக் கதவில் வெள்ளைத் துணியைக் கட்டி வெளியிட்டுள்ளேன்.

எத்தனை முறை கோரிக்கைகள் முன்வைத்தாலும் அவை. ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது ஒரு தேசத்தின் கனத்த அவமானச் சின்னமாக இந்த மயான கதவினில் இந்த வெள்ளைத்துணிகள் தொங்கட்டும்" எனப் பதிவேற்றியுள்ளார்.



இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படும் விடயத்தில் வெவ்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே இராஜாங்க அமைச்சரான அலி ஷாஹிர் மௌலானா, தனது எதிர்ப்பை பொரளை மயான நுழைவாயிலில் வெள்ளைத் துணிகளைக் கட்டி வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## சம்பிக்க ரணவக்கவுக்கு சஜித் அணியில் பதவி?



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவராக விரைவில் நியமிக்கப்படலாம் என கட்சியை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்புரிமையில் இருந்து விலகுவதாக நேற்று முன்தினம் அறிக்கையொன்றை இவர் வெளியிட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேலும் சில உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## போகம்பர சிறையில் 23 பேருக்கு தொற்று



(கொழும்பு)

போகம்பர சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 23 பெண் கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிறைச்சாலையில் கந்தகாட்டில் இருந்து அழைத்துவரப்பட்ட 663 கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை மூலம் 23 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஜ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2181

**ஐங்கரன்**


கள்ள நோட்ட மாத்துறவன் கூட ஈசியா மாத்திட்டு போயிற்றான்...



கொஞ்சூண்டு கிழிஞ்ச நோட்ட மாத்துறதுக்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு...ச்சே

**சுமதி**

பேசும் படம்!



**ரவீந்திரன்**

வருடம் முடிய போகுது நீங்கள் செய்த சாதனை என்ன?



என்ன டா கேட்ட...
உயிரோடு இருக்குறதே சாதனைதான் டா...

**நிஜாந்தினி**



அதிகாலை நீ நினைத்த நேரத்தில் எழுந்து விட்டாலே தோல்விகள் உன்னைவிட்டு ஒதுங்கிக்கொள்ளும்

**அனிக்க**

மனைவி என்பவள்...



10 வருடம் ஜெயில்ல இருந்த ஒருத்தன் தப்பித்து வீட்டுக்கு போனான்...
நீ தப்பிச்சு 8 மணிநேரம் ஆகுதுன்னு நியூஸ்ல சொல்றாங்க இப்பதான் வாற எங்க போன....

**சுஜீவன்**

பணம் பத்தும் செய்யும் இது "பழமொழி"
பாசம் வச்சா அது நம்மள வச்சு செய்யும் இது "புதுமொழி"



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் செயல் துரோகத்தனமாகும்

## அஜித் ரோஹண எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் தனிமைப் படுத்தல் சட்டங்களை மீறும் செயல் துரோகத்தன மாகவே கருதப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறானவர்கள் மீது எவ்வித கருணையும் காட் டப்படாது. நாட்டில் துரோ கிகளாகவே கருதப்படும் வாய்ப்பு இருக்கிறது.

இவர்களுக்கு எதிராக நாட்டின் சட்டத்தின் அடிப்ப டையில் கடுமையான நட வடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

அத்துடன், இவர்களுக்கு எதிராக மூன்று வருடங்கள் வரை சிறைத் தண்ட னையும், அதேபோன்று அபராதமும் விதிப்பதற்கு சட்ட நடைமுறை இருக்கி றது.

நாட்டின் சில பகுதிகளில் பி.சி.ஆர். பரிசோதனை களை மேற்கொள்வதற்கும் மற்றும் விரைவு ஆன்டிஜன் பரிசோதனைகளை மேற் கொள்வதற்கும் சிலர் மறுப்பு தெரிவிப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இவ்வாறானவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்வதற்கு தனிமைப்படு த்தல் சட்டத்தின் கீழ் இடம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சுற்றுலாத் துறையை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் சுற்றுலாத் துறையை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்தி ருக்கும் நிலையில் இது தொட ர்பான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வரு கின்றதாக தெரிய வருகிறது.

இந்த நடவடிக்கையின் கீழ் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத் துறையை திறந்து விடுவதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்து இருக்கிறது.

எனினும் நாட்டின் தெற்கு பகுதி மற்றும் கிழக்கு, வட மேற்கு பகுதிகளில் மாத்திரம் சுற்றுலாப் பயணிகளை அனு மதிப்பது என அரசாங்கம் முடி வெடுத்திருக்கிறது.

இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கீழ் இடம்பெற்றிருக்கிறது.

இதன்போது இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலா பய ணிகளுக்கான சுகாதார ஒழுங்கு விதிகளை விரைவில் தயாரிக்குமாறு உத்தரவிடப் பட்டு இருக்கிறது.

நாட்டில் கொரோனா பரவல் காரணமாக இந்த ஆண்டில் மாத்திரம் சுமார் 500 பில்லி யன் ரூபாய்கள் சுற்றுலாத் துறையில் இருந்து நட்டமாக எதிர்நோக்கப்பட்டிருப்பதாக மதி ப்பிடப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் புதிய திட்ட த்தின்படி ஜனவரி மாதம் இர ண்டாம் வாரத்தில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நாட்டுக் குள் வரவழைக்கப்பட உள்ளா ர்கள். மத்தள வானூர்தி தள த்தின் ஊடாக நாட்டுக்குள் வரவழைக்கப்படும் அவர்கள் 58 விருந்தகங்களில் தங்க வைக்கப்படுவர் என தெரிவிக்க ப்படுகிறது.

இதற்காக நாட்டின் தென் பகுதி, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையின் விருந் தகங்கள் தயார் செய்யப்பட்டு இருக்கின்றன.

இலங்கைக்கு வரவழைக் கப்படும் சுற்றுலாப் பயணிகள் முதல் வாரத்தில் கரையோர பிரதேசங்களில் மாத்திரமே நடமாடுவதற்கு அனுமதிக்கப்ப டுவார்கள்.

இதனை கண் காணிக்கும் முகமாக முழுமையான இரா ணுவத்தினர் உட்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டிருக்கிறது.

இலங்கைக்கு வரும் சுற் றுலாப்பயணிகள் ஏனைய பிரதேசங்களுக்குள் பிரவே சித்து விடக்கூடாது என்பதை கண்காணிப்பதற்காகவே இந்த இராணுவ நடவடிக்கை மேற் கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நீதியமைச்சின் செயற்பாடுகள் தற்போதுள்ள கட்டடத்திலேயே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

(கொழும்பு)

நீதி அமைச்சின் செயற் பாடுகளை தற்போதுள்ள கட்ட டத்திலேயே தொடர்ந்தும் முன் னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது.

நீதி அமைச்சிற்கு உரித் தான நிறுவனங்களுக்காக புதிய கட்டடத்தை வாடகைக்கு எடுப்பதற்கான யோசனை தொடர்பில் கலந்துரையாடிய தன் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற த்திற்கான நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால், இட வசதிக்கான தேவை ஏற் பட்டுள்ளதாக நீதி அமைச்சு அறிக்கையூடாக சுட்டிக்காட்டி யிருந்தது.

17 நிறுவனங்களைச் சேர்ந்த 350 ஊழியர்களைக் கொண்ட அமைச்சகத்தை நீதிமன்ற வளாகத்திற்கு அரு கிலுள்ள இடத்தில் நடத்திச் செல்வது முக்கியத்துவம் வாய் ந்த விடயமாக அடையாளம் காணப்பட்டது.

நீதித்துறை வீட்டுத்திட்ட வளாகத்திற்கு அமைச்சகத்தை இடமாற்றம் செய்ய உத்தேசி க்கப்பட்டுள்ள நிலையில், நிர் மாண நடவடிக்கைகள் நிறை வடையும் வரை, அடுத்த இர ண்டு ஆண்டுகளுக்கு உலக வர்த்தக மையத்திற்கு அமை ச்சகத்தை கொண்டு செல்லவும் எதிர்பார்க்கப்பட்டது.

இதற்காக மாதாந்தம் 9.8 மில்லியன் ரூபா வாடகை செலு த்த நேரிடும்.

எவ்வாறாயினும், பல சுற்று பேச்சுவார்த்தைகளின் பின் னர், தற்போதுள்ள கட்டடத்தை பராமரிக்கவும் உயர் நீதி மன்றம் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் விரிவாக்கத்திற்கு மாற்று இடங்களை உருவாக்கவும் நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சு விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சட்டமும் சட்டையும்

எனக்கு ஒரு நண்பர் இருந்தார். அவர் ஒரு சட்டத்தரணி. ஒரு நாள் அவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது கேட் டேன்...ஏன் சேர்? நீங்கள் எல்லாம் கோட்டிலே வாதாடுகின்ற பொழுது கறுப்பு நிற அங்கி அணிகின்றீர்கள். அதற்கு என்ன காரணம்? சட்டத்திற்கும் கறுப்பு கலருக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டேன். அது ஒரு சுவாரஸ்யமான கதை என்றார் அவர். சொல்லுங்களேன் தகவலிலே சொல்லுவோம் என் றேன். அவர் சொன்னார்...கி.பி. 1694 ஆம் ஆண்டிலே இங் கிலாந்து அரசி இரண்டாவது மேரி என்பவர் இறந்து போனார். அந்த ராணியினுடைய கணவர் மூன்றாம் வில்லியம். அவர் ஒரு உத்தரவு போட்டாராம்.

அரசியினுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில் சட்டத்தரணிகள் எல்லோரும் கறுப்பு நிற அங்கி அணிய வேண்டும் என்று. அன்றைக்கு ஆரம்பித்த அந்தப் பழக்கம் அதற்குப்பின் மாறவே இல்லை. இன்றைக்கும் தொடர் கின்றது. சட்டத்தரணிகள் எல்லாம் முதலில் கறுப்பு அங்கி மட்டும் தான் அணிந்தார்களாம்.

அதிலே ஒரு சின்ன சங்கடம். ஏற்கனவே உடம்பு கறுப்பாக இருக்கின்றவர்கள், அதற்கு மேலே கறுப்பு டிரஸ் வேறு போட் டுக் கொண்டால் முகம் பளிச் சென்று தெரியாது இல்லையா? அதனால் முகம் பளிச்சென்று தெரிவதற்காக அவர்கள் எல்லாம் வெள்ளை நிற பட்டியை அணிய ஆரம்பித்தார்களாம்.

இப்படித்தான் இங்கிலாந்திலே அந்தப் பழக்கம் ஆரம்பமா யிருக்கின்றது. அந்த சமயத்திலே இந்தியாவை ஆண்டது பிரிட்டிஷ்காரர்கள் தானே. அதனால் இங்கேயும் அந்தப் பழக் கம் நடைமுறைக்கு வந்துவிட்டது.

அதேமாதிரி சர்ச்சிலின் மூதாதையரான மார்ல்பரோ பிரபு வின் ஞாபகார்த்தமாக நீதிபதிகள் வெள்ளைக் குல்லாய் அணிகின்ற முறை பழக்கத்திற்கு வந்தது.

இதுதான் என்னுடைய நண்பர் சொன்ன தகவல். இங் கிலாந்திலே நீதிமன்றம் என்பது மிகவும் மதிப்பு உள்ளது. அந்த அளவுக்கு சட்டத்திற்கு அங்கே மரியாதை. அங்கே நடந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியை ஒரு சகோதரி எழுதியனுப்பி யிருக்கிறார். அவருடைய அப்பா நீதித் துறையைச் சேர்ந்தவர். பத்மஸ்ரீ விருது பெற்றவர். அவர் சொன்னதாம் இது.

அங்கே ஒரு வழக்கிலே ஒரு முக்கியமான தீர்ப்பு வழங்க வேண்டியிருக்கு. நீதிபதி பார்-அட்லா படித்த பெரிய பெரிய சட்டத்தரணிகள், ஜீரி எல்லோருமாகக் கூடி அந்த வழக்கைப் பற்றி விவாதிக்க வேண்டும். சுமாராக நாற்பது பேர்.

இதற்காக நீதிமன்ற ஹோலிலே விசேட சேம்பரில் நுழை வதற்கு முன்னாலே அவர்கள் எல்லாம் தங்களுடைய கோட்டு -தொப்பி எல்லாவற்றையும் கழற்றி அங்கே நின்று கொண்டி ருந்த ஒரு பியூனிடம் கொடுத்துவிட்டு உள்ளே போனார்கள். அந்த ஆள் படிக்காதவர்.

அவர் ஒவ்வொருத்தர் கொடுப்பதையும் வாங்கி உள்ளே வைத்துக் கொண்டிருந்தார். அது அவருடைய வேலை. உள்ளே போன நீதவான்-சட்டத்தரணி-ஜூரி எல்லோரும் ரொம்ப நேரமாக அந்த வழக்கைப் பற்றி விவாதித்தார்கள். ஒரு நாள் பூராக ஆகிவிட்டது.

அவ்வளவு தீவிரமாக அக்கு வேறு ஆணி வேறாக பிய்த்து உதறியிருக்கின்றார்கள். ஒரு வழியாக 13 மணி நேரம் கழித்து வெளியே வந்திருக்கின்றார்கள்.

ஒவ்வொருத்தராக வரவர அந்த பியூனும் அவரவரு டைய கோட்டு- தொப்பியை அவரவரிடம் மிகவும் மரியாதை யாக திருப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தாராம்.


கடைசியாக தீர்ப்பை எழுதி முடித்து விட்டு மிகவும் திருப்தி யோடும் களைப்போடும் வெளியே வந்து கொண்டிருந்தாராம். இந்த ஆள் அவருடைய மேல் கோட்டையும் தொப்பியையும் எடுத்து அவரிடம் மிகவும் மரியாதையோடு நீட்டினாராம்.

நீதவானுக்கு மிகவும் ஆச்சரியம். இந்த ஆள் எப்படி இவ் வளவு பேருடைய கோட்டை பிசகாமல் ஞாபகத்திலே வைத்திருக் கின்றார் என்று. அதனாலே அவர் அந்த ஆளை ப்பார்த்து... ஏம்பா இந்தக் கோட்டை கொடுக்கின்றாயே...இது என்னுடை யது என்று உனக்கு எப்படித் தெரியும்? என்றாராம். இதற்கு அந்தப் பியூன் மிகவும் பணிவாகப் பதில் சொன்னாராம்.

ஐயா. இந்தக் கோட்டை உங்களிடம் வாங்கி மாட்டினேன். இப்பொழுது திரும்ப உங்களிடம் தரவேண்டும். தந்துவிட்டேன். இதுதான் என்னுடைய வேலை. மற்றப்படி இது உங்களு டையதா? இல்லையா? என்று எனக்குத் தெரியாது என்றாராம்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

18



**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

குழுவின் கூட்டமானது குறித்த அமைச்சின் செயலாளருடனான கலந்தாலோசனையுடன் கூட்டப்படலாம். அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணங்களை கேட்டுப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும். குழுக்களிற்கான பொது விதிகள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களிற்கும் ஏற்புடையதாகும்.

### சட்டவாக்க நிலையியற் குழு

தவிசாளராக பிரதிச் சபாநாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேறு பத்து உறுப்பினர்களையும் கொண்டுள்ள சட்டவாக்க நிலையியற் குழு எனப் பெயர் குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

தெரிவுக் குழுவானது அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் இக்குழுவில் சேவையாற்றுவதற்கான மேலதிகமான உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம். சபாநாயகர் அத்தகைய மேலதிக உறுப்பினர்களை நியமிப்பதற்குத் தத்துவம் கொண்டவராவார்.

குழுவின் கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் கடமையானது, பாராளுமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் நியதிச்சட்டங்களையும் சட்டமூலங்களையும் பரிசீலனை செய்தலுடன் வரையறுக்கப்படும்.

தமது கடமைகளைச் செயற்படுத்துவதற்காக ஆட்களையும், பத்திரங்களையும், பதிவேடுகளையும் வரவழைப்பதற்கு குழு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும். சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் தவிசாளருக்கு மூல வாக்கு ஒன்றிருத்தல் வேண்டுமென்பதுடன் வாக்கெடுப்பின்போது வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில், அறுதியிடும் வாக்கொன்றும் அவருக்கு இருத்தல் வேண்டும்.

சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் சட்டமூலம் ஒன்றிற்குப் பொறுப்பான ஓர் உறுப்பினர், அக்குழுவின் ஓர் உறுப்பினராக இல்லாத சந்தர்ப்பத்தில், அத்தகைய சட்டமூலம் பரிசீலிக்கப்படும் கூட்டம் எதற்கும் சமுகமளிக்கவும், அச்சட்டமூலத்தைப் பற்றி உரை நிகழ்த்தவும், அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எழும் எப்பிரச்சினை குறித்தும் திருத்தங்களைப் பிரேரித்து அக்குழுவின் ஓர் உறுப்பினர் போன்று வாக்களிக்கவும் உரிமையுடையவராவார்.

சட்டவாக்க நிலையியற் குழுவின் நடைமுறை, ஏறத்தாழ முழுப் பாராளுமன்றக் குழுவின் நடைமுறையை ஒத்ததாக இருத்தல் வேண்டுமென்பதுடன் நிலையியற் குழுவொன்றின் கூட்ட அறிக்கைகள் முழுப் பாராளுமன்றக் குழுவொன்றின் கூட்ட அறிக்கைகள் பதியப்படுதல் போன்றே பதியப்படுதலும் வேண்டும்.

அத்துடன் குழுவானது பாராளுமன்றத்தால் ஏதேனும் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அக்காலவெல்லைக்குள் சட்டமூலத்தை அல்லது உத்தேச நியதிச்சட்டத்தை உள்ளடக்கிய குழுவின் அறிக்கையினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்:

ஆயினும், ஒரு அமர்வுத்தொடரின் இறுதியில் சட்டவாக்க நிலையியற் குழுவொன்று அதன் கலந்தாராய்வினை முடித்து அறிக்கையைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் அக்குழுவின் நடவடிக்கைகள் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வுத்தொடரில் அச்சட்டமூலம் அல்லது உத்தேச நியதிச்சட்டம் ஆற்றுப்படுத்தப்படும் சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

### சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்கள்


குழுவில் சேவையாற்ற விருப்பமற்ற எந்த உறுப்பினரும் குழுவில் நியமிக்கப்படமாட்டார். குழுக்களில் உறுப்பினர்களை நியமிக்க முன்பதாக, முதற்கோலாசானுடனும், கட்சிகளின் தலைவர்களுடனும் ஆலோசனை நடாத்தப்படும். தெரிவுக் குழுவானது, உதாரணமாக பாராளுமன்றத்தில் கட்சிகளுக்கு உள்ள பலத்தின் விகிதாசாரத்திற்கேற்பவே பல்வேறு குழுக்களினதும் உறுப்பினர்களை நியமிக்கும்.

ஒவ்வொரு குழுவிலும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையும் வேறுபடும். பெரும்பாலான நிலையியற் குழுக்கள் இருபது உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். நிலையியல் கட்டளைகள் பற்றிய குழுவிலே ஆகக் குறைந்தது ஒன்பது உறுப்பினர்கள் இருப்பார்கள்.

**குழுவில் சேவையாற்ற விருப்பமற்ற எந்த உறுப்பினரும் குழுவில் நியமிக்கப்படமாட்டார். குழுக்களில் உறுப்பினர்களை நியமிக்க முன்பதாக, முதற்கோலாசானுடனும், கட்சிகளின் தலைவர்களுடனும் ஆலோசனை நடாத்தப்படும். தெரிவுக் குழுவானது பாராளுமன்றத்தில் கட்சிகளுக்கு உள்ள பலத்தின் விகிதாசாரத்திற்கேற்பவே பல்வேறு குழுக்களினதும் உறுப்பினர்களை நியமிக்கும். தெரிவுக் குழுக்களின் தவிசாளர் சபாநாயகரால் நியமிக்கப்படுவார்.**

குழுவின் தலைமைத்துவமானது சாதாரணமாக அதிகாரத்தில் உள்ள கட்சியின் உறுப்பினருக்குச் சொந்த

குழு அறை இலக்கம் 1



மாகும். சபைக்குழு, நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு என்பனவற்றின் தவிசாளராக சபாநாயகர் இருப்பார்.

விசேட நோக்கங்களுக்கான ஏனைய குழுக்களின் தவிசாளர்கள் குழு உறுப்பினர்களிடையே தெரியப்படுவார்கள். தெரிவுக் குழுக்களின் தவிசாளர் சபாநாயகரால் நியமிக்கப்படுவார்.

குழுக் கூட்டத்தின் கூட்ட நடப்பெண் அண்ணளவாக மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் மூன்றில் ஒன்றாக இருக்கலாமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பாராளுமன்றமானது, நன்கு வடிவமைக்கப்பட்டதும், ஒரு சீரான சட்டத் தொகுதியின் கீழ் இயங்குவதுமான ஒரு குழு முறைமையை வகுத்துள்ளது. இக்குழுக்களானவை பாராளுமன்றச் சபை அமர்வு நேரத்தை உண்மையிலேயே மீதப்படுத்துவதோடு, இலங்கைப் பாராளுமன்றச் சனநாயகத்தின் பயனுறுதி மிக்க தொழிற்பாட்டுக்கும் குறிப்பான பங்கை வழங்குகின்றன.

குழுத் தவிசாளரின் ஆளுமையிலேயே, குழுக்களின் பயனுறுதித்தன்மை பெரிதும் தங்கியுள்ளது. குழுவின் அனைத்து உறுப்பினர்களினதும் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள தவிசாளர் விரும்பின், அவ்வாறு அவர் செயற்பட வழிகளும் வகைகளும் உள்ளன. உறுப்பினர்களிடையே கடமைப் பொறுப்பை ஏற்படுத்த அவர் சில உப குழுக்களை நியமித்து சில உறுப்பினர்களை அவ் உப குழுக்களின் தவிசாளராக்கலாம்.

குழுக்கள் அனைத்திலும், எப்போதும் அவற்றின் பணிகளில் விசேட ஆர்வம் காட்டுகின்றதொரு குழு இருக்கும். குழுப்பணிகளில் உண்மையாகவே ஆர்வம் காட்டுகின்ற, ஒழுங்காக கூட்டங்களுக்குச் சமுகமளிக்கின்ற உறுப்பினர்கள் இவர்களேயாவர். இக்காரணி கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், குழு ஒழுங்காக விருத்தி செய்யப்படின், குழுவின் பயனுறுதி மிக்க செயற்பாட்டிற்கு அது அனுகூலமாய் அமையும்.

பிரித்தானிய முறையிலிருந்து தோன்றியதாயினும், இலங்கையில் நிலவும் குழு முறைமையானது, இலங்கைப் பாராளுமன்றத்திலும் சமூகத்திலும் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப அதன் தன்மைகளில் மாற்றம் பெற்றுள்ளது.

குழுக்கள் கூடிய அதிகாரங்களைப் பெற்றுள்ளதோடு, விரிவான நியாயாதிக்கத்தையும் கொண்டுள்ளன. அதே வேளை, பாராளுமன்றத்தின் நாளாந்த அலுவல்களுக்கு அவை பாரிய பெறுமதி மிக்க பங்களிப்பை வழங்கியுள்ளன.

### குழு அறைகள்

குழுக்கள் கூட்டங்களை நடாத்துவதற்கு குழு அறைகள் 8 உள்ளன. அறைகளின் இடவசதிக்கேற்ப ஆசனங்களின் எண்ணிக்கை ஒழுங்குமுறை வேறுபடுகின்றன. குழு அறை இலக்கம் 1னதும் குழு அறை இலக்கம் 8னதும் படங்கள் காட்டப்பட்டுள்ளன.

### பாராளுமன்ற அமர்வு நாட்களும் நேரங்களும்

### பாராளுமன்ற அமர்வு நாட்கள்


பாராளுமன்ற நிலையியற் கட்டளை இல. 8(1) இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, ஒரு மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை அடுத்துவரும் வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக இரு வாரங்களிலும் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும். அத்தகைய முதலாவது மூன்றாவது வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும்.

ஆயினும், பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 75 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பரிசீலிக்க பாராளுமன்றம் இருபத்தாறு நாட்கள் கூட வேண்டும்.

எனினும், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அங்கீகாரத்திற்கு அமைய இவ்வொதுக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்படலாம்.

(தொடரும்..)

# போதைப்பொருள் கடத்தல் மூன்று பேர் கைது



(கொழும்பு)

டுபாயில் இருந்து நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டு வருவதற்கு திட்டமிட்ட சந்தேக நபர்கள் மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

களனி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

டுபாயில் இருந்து கடல் மார்க்கமாக இவ்வாறு போதைப் பொருட்களை கொண்டு வரத் திட்டமிடப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ)

# ஆலய வழிபாடு ஏன் – எதற்கு – எப்படி

## நன்றியை காட்டும் நைவேத்தியம்

கடவுள் முன்பு மங்கலப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் நைவேத்தியமாகப் படைத்து வழிபாடு செய்யும் பழக்கம் இன்று, நேற்றுத் தோன்றியது அல்ல, சங்க காலத்தில் இருந்தே அது நடைமுறையில் உள்ளது.

சங்ககால மக்கள் பூசை செய்யும் சமயத்தில் ஒரு பேழையில் பொருட்களை வைத்து, வெள்ளரிசியை வலது கையால் எடுத்து மூன்று முறை பேழையை சுற்றி தூவுவதை வழக்கத்தில் வைத்திருந்தனர். இதற்கு "திருவமுது படைத்தல்" என்று பெயர்.

இதுதான் பிறகு கடவுளுக்கு நைவேத்தியம் படைக்கும் சடங்காக மாறியது என்பார்கள்.

மூலவருக்கு நைவேத்திய பூஜைகளை திரை போட்டே செய்ய வேண்டும். மேலும் ஆலயத்தின் அக்னி மூலையில் உள்ள மடப்பள்ளியில் தயாரித்த உணவு வகைகளையே இறைவனுக்குப் படைக்க வேண்டும்.

ஒரு ஆலயத்தில் நிறைய சந்நிதிகள் இருந்தால், நைவேத்தியத்திற்கு தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களில் மூன்றில் ஒரு பகுதியை மூலவருக்கு சமர்ப்பிக்க வேண்டும். மீதமுள்ள 2 பங்கை மற்ற சந்நிதிகளில் சமமாகப் பங்கிட்டு நிவேதிக்க வேண்டும்.

மடப்பள்ளியில் தயாரித்து மூலவர் முன்பு நிவேதிக்கப்படும் உணவுப் பொருட்களின் சாரம் ஒரு போதும் போய் விடாது. அதற்கு மாறாக நைவேத்தியங்களுக்கு இறைவன் அருளால் கூடுதல் சுவை சேர்ந்து விடும் என்பதே உண்மை.

நைவேத்தியமாகப் படைக்கப்படும் ஒவ்வொரு உணவுப் பொருட்கள் மீதும் மலர் தூவ வேண்டும். பின் கையில் தண்ணீரைத் தொட்டு நைவேத்தியப் பொருட்களை ஒரு சுற்று சுற்றி மூலவரை நோக்கி காட்டுதல் வேண்டும்.

அதாவது ஒரு தாய் தன் குழந்தைக்கு அமுது ஊட்டுவது போன்ற பாவனையில் இது இருத்தல் வேண்டும். இது தான் நைவேத்தியம் செய்யும் முறையாகும்.

இறைவனுக்கு அபிஷேகம் செய்து முடிக்கும் போது, அர்ச்சனை செய்து முடிக்கும் போது நைவேத்தியம் படைக்கப்பட வேண்டும் என்று சூட்சமாகமம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறைவனுக்கு நாம் எந்த உணவுப் பொருளை நைவேத்தியம் செய்தாலும் சரி, அதை அமிர்தமாக பாவித்துப் படைத்தல் வேண்டும்.

ஒவ்வொரு உணவுப் பொருளும் நிவேதனம் செய்யப்படும் போது தேனு முத்திரை காட்டி, பூ வைத்து, நைவேத்தியத்தை சுவாமியின் வலது கையில் கொடுத்து, தீர்த்த பானத்தையும் கொடுக்க வேண்டும் என்று காரண ஆகம பூஜா விதிப்படலத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒருபோதும் சூடான ஆகாரங்களை நைவேத்தியத்திற்கு பயன்படுத்தக் கூடாது. அதுபோல தலை முடி, புழு, மணல், உமி போன்றவை கலந்த அரிசி உணவை நைவேத்தியமாக படைத்தல் கூடாது.

மேலும் நாம் நன்றாக சாப்பிட்டு விட்டு போய் சுவாமிக்கு நைவேத்தியம் படைத்தல் கூடாது. உணவு உண்ணும் முன்பு அதை இறைவனுக்குப் படைக்க வேண்டும்.

தினசரி வாழ்வில் இதைக் கடைப்பிடித்தால் பகவானிடம் மனம் ஒன்றி விடும். இது நிஜம். வேண்டுமானால் முதலில் உங்கள் வீட்டில் உள்ள கடவுள் படம் முன்பு 2 வாழைப்பழம் வைத்து நைவேத்தியம் செய்து வாருங்கள்.

பிறகு அது அன்னம், பருப்பு, பாயாசம் என்று பெரிய படையலாக மாறி விடும். கடவுளுக்கு சமர்ப்பித்து விட்டே சாப்பிட வேண்டும் என்ற பக்குவம் வந்து விட்டால், நீங்கள் செய்யும் ஒவ்வொரு நைவேத்தியமும் அர்த்தமுள்ளதாக மாறிவிடும்.

நாளடைவில் இறைவனிடம் காட்டாமல் நீங்கள் எதையுமே சாப்பிட மாட்டீர்கள். வீர பாண்டிய கட்ட பொம்மன் தன் வாழ்நாள் முழுவதும் தினமும் மதியம் திருச்செந்தூர் முருகனுக்கு நைவேத்தியம் செய்து பூஜைகள் முடிந்த பிறகே சாப்பிட உட்காருவார். இப்படி நிறையப் பேர் இன்றும் உள்ளனர்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 504 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொவிட் -19 பரவல் காரணமாக பல்வேறு நாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 504 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாயிலிருந்து 144 பேரும் மாலைதீவிலிருந்து 31 பேரும் கட்டாரின் டோஹாவிலிருந்து 51 பேரும் அவுஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து 75 பேரும் மற்றும் ஜப்பானின் நரிட்டோவிலிருந்து 203 பேரும் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களினால் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ஜ)

## 60 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒன்பது பொலிஸ் பிரிவுகளிலும் 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவானது தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கைகள் குறித்து பொதுச்சுகாதார பரிசோதகர்களுடன் ஒத்துழைப்பு வழங்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஜ)

## மகர சம்பவம்;255 பேரிடம் விசாரணை

(கொழும்பு)

மகர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. இதுவரை 255 பேரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஜ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 240-280 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 |
| தக்காளி | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 120 |
| புடோல் | 150 | 160 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300-400 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 |
| பாகற்காய் | 400 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 400 | 450 | 260 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 160 | 120 |
| கறிமிளகாய் | 200 | 300 | 280 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 280 |
| போஞ்சி | 250 | 240 | 240 |
| கத்தரிதம்புள்ள | 250 | 240-280 | 240 |
| கீரை - 1 பிடி | 80 | --- | 80 |
| தேசிக்காய் | 200 | 180 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | --- | 300 |
| வெங்காயப்பூ | --- | --- | --- |
| முள்ளங்கி | 80 | 160 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | --- | 120 |



# சிறுவர் அரங்கம்

## அறுபது வயதில் வந்த திருமண ஆசை



முல்லாவின் மனைவி இறந்து போய் விட்டதால் முல்லா மறுமணம் செய்து கொள்வது என்று தீர்மானித்தார்.

அப்பொழுது அவர் 60 வயதை நெருங்கிக் கொண்டிருந்தார்.

முதுமைக் காலத் தில் அவருக்குத் திருமண ஆசை ஏற்பட்டது. அவருடைய நண்பர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு நாள் நண்பர்கள் முல்லாவிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது தங்கள் அதிருப்தியை வெளியிட்டனர்.

"முல்லா இந்த முதுமைப் பிராயத்தில் உங்களுக்குத் திருமண்ம் அவசியம் தானா? உங்களுக்கு ஏன் இப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட்டது?" என நண்பர்கள் கேட்டனர்.

முல்லா வழக்கமான சிரிப்புடன் பேசத் தொடங்கினார்." நண்பர்களே, உங்கள் அன்பான கருத்துக்கு நான் பதில் சொல்லி ஆக வேண்டும்.

இளமைப் பருவமோ - முதுமைப் பருவமோ ஆணுக்கு ஒரு பெண் துணை தேவை நான் முதுமைக் காலத்தில் திருமணம் செய்து கொள்வதற்கு இது ஒரு காரணம் எனக்கு வாய்க்கும் மனைவி நல்லவளாக என்னிடம் அன்பும் ஆதரவும் உள்ளவளாக இருந்தால் முதுமைக் காலத்திலும் நான் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு வழி பிறக்கும் அல்லவா?"

முல்லாவின் இந்தப் பதிலைப் கேட்ட நண்பர்கள் " முல்லா அவர்களே! நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக முதுமைக் காலத்தில் உங்களுக்கு வந்து வாய்க்கும் மனைவி பொல்லாதவளாக இருந்து விட்டால்?" என்று கேட்டனர்.

"வயதுதான் ஆகி விட்டதே? இன்னும் கொஞ்ச காலந்தானே அவளுடன் வாழப் போகிறோம் என்று மனத்தைத் தேற்றிக் கொள்வேன்" என்று முல்லா பதிலளித்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?




எனவே, நெற்றியைச் சுருக்கினார் அலெக்சாண்டர். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டனர் ஜோதிடர்கள்.

மாசிடோனிய மன்னர்கள் யாரும் இதற்கு முன்னர் டெஸியஸ் மாதத்தில் போர்க்களம் சென்றதில்லை.

சென்றதில்லையா? வென்றதில்லையா? உறுமலாகக் கேட்டார் அலெக்சாண்டர். சென்றதுமில்லை. வென்றதுமில்லை பதில் வந்தது ஜோதிடர்களிடமிருந்து.

முன்னுதாரணம் இல்லை. ஆகவே வேண்டாம். அப்படித்தானே. ஆமாம் மன்னரே. தாங்கள் மன்னிக்க வேண்டும்.

இனி நான் செய்வது தான் முன்னுதாரணம். இந்த டெஸியஸ் மாதத்தை ஆர்மிடிசியஸ் என்று அழைக்க உத்தரவிடுகிறேன். இதே மாதத்தில் போர்க்களம் செல்கிறோம். தயாராகுங்கள்.

அலெக்சாண்டர் பாரசீகப் போருக்குத் தயாராகிவிட்ட செய்தி முறைப்படி அறிவிக்கப்பட்டது. பலரையும் சென்றடைந்தது. அதில் இஸ்த்மஸ் பேரவையும் ஒன்று.

கிரேக்க நாட்டின் அரசியல் வல்லுநர்கள், தத்துவ மேதைகள், போர் விற்பன்னர்கள், அறிவிற் சிறந்தவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய பேரவை இஸ்த்மஸ்.

பேரவை உறுப்பினர்கள் திடீரெனக் கூடினார்கள். நிறைய வாதங்கள். அதைவிட அதிகமாகப் பிரதிவாதங்கள், எதிர்ப்புகள், அனுசரணையான பேச்சுகள். எல்லாம் எதற்காக?

பாரசீகப் படையெடுப்புக்குச் செல்லும் அலெக்சாண்டருக்கு ஆதரவு தெரிவிக்கலாமா? நேசக்கரம் நீட்டலாமா? வேண்டாமா? என்பதை முடிவு செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் அது. எல்லாம் முடிந்ததும் சுமுகமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்.

பாரசீகத்துக்குப் படையெடுத்துச் செல்லும் அலெக்சாண்டருக்கு உதவியாக வீரர்களை அனுப்புகிறோம். அவருக்கு எங்களுடைய தார்மீக ஆதரவு உண்டு.

அந்தக் கூட்டத்துக்கு தனக்கு மிகவும் பிடித்த கிரேக்க அறிஞரான டயாக்னிஸ் வருவார் என்று எதிர் பாாத்திருந்தார் அலெக்சாண்டர். தனக்கான ஆதரவைத் தேடாமல் டயாக்னிஸையே அலெக்சாண்டரின் கண்கள் தேடின.

இதோ வருவார், அதோ வருவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்.கண்கள் பூத்துப் போனது தான் மிச்சம். வரவில்லை, கடைசி வரை. (தொடரும்)

பிழையைச் சரிப்படுத்திக்கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை.
– ராஜாஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொற்றாளர்களின் எண்ணிக்கை மறைப்புச் செய்யப்பட்டதா?

மருதனார்மடம் சந்தையில் வர்த்தகம் செய்யும் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 32 பேர் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என்ற தகவல் அனைவரையும் நிலைகுலைய வைத்துள்ளது.

அதேநேரம் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 31 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி என்பதாகச் செய்திகள் வெளிவந்த போதிலும் உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தகவல்கள் ஆறு பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதாக வெளிவந்திருந்தது.

எனினும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று விடுத்த ஊடக அறிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் 36 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டபோதிலும் அஃது மறைப்புச் செய்யப்பட்டதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

உண்மையிலேயே கொரோனாத் தொற்று மறைப்புச் செய்யப்பட்டிருக்குமாயின் அஃது மிகப்பெரிய அபத்தம் என்பதும் இஃது பொது மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

எனவே ஆறு பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதாக வெளியிடப்பட்ட தகவல் தொடர்பான நிலைமையை சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அதே சமயம் கொரோனாத் தொற்று மறைப்புச் செய்யப்படுகின்ற ஒவ்வொரு கணப்பொழுதிலும் தொற்றுப் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதும் இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

இதற்கு மேலாக, கொரோனாத் தொற்றுத் தொடர்பான தகவல்களை வெளியிடுவதில் வடபகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட நேர்வழிப் பாதை வகுக்கப்படவில்லை போலவும் தெரிகிறது.

எனவே இது விடயத்தில், மரியாதைக்குரிய எங்கள் மருத்துவர்கள் தங்களுக்குள் ஒரு சரியான தொடர்பாடலை ஏற்படுத்திக் கொண்டு உண்மைத் தகவல்களை வெளியிட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று 36 பேருக்கு ஏற்பட்ட போதிலும் அஃது மறைப்புச் செய்யப்பட்டதாக இராணுவத் தளபதி முன்வைத்த குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால்,

அது முழுத் தமிழ் மக்களையும் அரசியல் ரீதியாகவும் சர்வதேசத்தின் பார்வையிலும் பாதிப்பதாக இருக்கும்.

உண்மையில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதில் எங்கள் சுகாதாரத்துறையினர் கடுமையாகப் பாடுபடுகின்றனர்.

அவர்களுக்கு அப்பாற்பட்ட புறக்காரணிகள் காரணமாக அவர்களின் முயற்சிகள் சவாலுக்குட்படுத்தப்படுகின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றை மறைப்புச் செய்ய வேண்டிய தேவை இருக்குமென்று நாம் கருதவில்லை.

ஆனாலும் குற்றஞ்சாட்டியவர் இராணுவத் தளபதி. எனவே உரிய விளக்கம் அளிப்பது சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் கடமையாக இருக்கும்.

# அத்துமீறிவரும் இந்திய மீனவர்களை கடலில் இறங்கி விரட்டியடிப்போம்

## உயிர்ச் சேதங்களுக்கு இரு நாட்டு அரசுகளுமே பொறுப்பு வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"இந்திய மீனவர்கள் அத்துமீறி வந்து அட்டூழியத்தில் ஈடுபடுவதை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. வடமராட்சி மீனவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடலில் இறங்கி இந்திய மீனவர்களை விரட்டியடிப்போம்."

இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் ந.வர்ணகுலசிங்கம் எச்சரித்துள்ளார்.

அதனால் இரண்டு தரப்பிலும் ஏற்படும் உயிர்ச் சேதங்களுக்கும் இரண்டு நாட்டு அரசுகளும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பில் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளுடன் பருத்தித்துறை கரையிலிருந்து 3 கிலோ மீற்றர் தூரம் வரை வந்து, எமது மீனவர்களை விரட்டியடித்துவிட்டு தொழிலில் ஈடுபடுகின்றனர். எமது மீனவர்களின் வலைகளை அறுத்து நாசம் செய்கின்றனர்.

இதனால் வடமராட்சி மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். கூலி வேலைக்குச் செல்லும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பலர் நாளாந்த வாழ்க்கையைக் கழிப்பதற்கே அவதிப்படுகின்றனர். எனவே இந்திய மீனவர்களின் அத்துமீறல், அட்டூழியங்களை இனியும் பொறுத்திருந்து பார்க்க முடியாது. அவர்களுக்கு அஞ்சி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தொழில் ஈடுபட எமது மீனவர்களால் முடியாது.

அதனால் வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசங்கள் இணைந்து அனைத்து மீனவர்களும் கடலில் இறங்கி இந்திய மீனவர்களுடன் கைகலப்பில் ஈடுபடுவதே இறுதித் தெரிவாக உள்ளது. இந்திய மீனவர்களை விரட்டி விரட்டி அடிப்போம். அவர்களின் இழுவைப் படகுகள் மோதினால் எமது சிறிய படகுகள் மூழ்கி விடும்.

இரண்டு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்படும். அதற்கு இரண்டு நாட்டு அரசுகளும்தான் பொறுப்புக்கூறவேண்டும் என்றார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** புதியசின்னக் குளம் கிராமம், அரசடிக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளம், முதலைக்குத்தி, நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைக்காடு, கமலாம்பிகை அரிசி ஆலை, பூவரசங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பெண் கிராம சேவகருக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)


அம்பலாந்தோட்ட பிரதேச செயலகத்தில் பணிபுரியும் பெண் கிராம சேவகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

கொரோனா அறிகுறிகளையடுத்து கடந்த 7 ஆம் திகதி அவர் சிகிச்சைக்காக அம்பலாந்தோட்ட மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டதை தொடர்ந்து, யாருக்கும் தெரியாமல் 8 ஆம் திகதி வைத்தியசாலையில் இருந்து வெளியேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

12 ஆம் திகதி பி.சி. ஆர் பரிசோதனையின் முடிவுகளில் அவருக்கு தொற்று இருந்தது தெரிய வந்தது. (ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இன்பமும் துன்பமும்



உலகில் வாழும் உயிரினங்கள் பல கோடியாகும். அவற்றுள் மனித இனம் மேலானது. தொழில்களைத் திறன்படச் செய்வதற்கான துணைக் கருவிகளையும், ஆராய்ச்சிக்கு விஞ்ஞான அறிவோடு நுண் கருவிகளையும் உபயோகிக்கக்கூடிய வகையில் உடல் உறுப்புக்கள் மனிதனிடம் அமைந்துள்ளன. மேலும் ஊறு, ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய ஐந்தையும் உணரும் ஐயுணர்வோடு, மனம், உயிர், மெய் எனும் மூன்று மறை பொருட்களை உணரத்தக்க ஆறாம் அறிவும் மனிதனிடம் அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்புகளை உணரும்போது தான் ஒரு பேருண்மை தெளிவாகின்றது. இயற்கையே தன் பரிணாமத்தின் உச்சகட்டமாக மனித வடிவில் வந்து, தனது இயல்புகளை ரசித்தும், பெருமைகளை உணர்ந்தும் நிறைவு பெறுகிறது என்ற உண்மை விளங்குகிறது. இவ்வளவு சிறப்புகளையும் பெற்ற மனிதனின் பிறவி நோக்கம், தனது அறிவில் முழுமை பெற்று, இயற்கையின் சிறப்பு உணர்ந்து அமைதியும், நிறைவும் பெறுவதேயாகும். மனிதனுடைய வாழ்வில் துன்பங்கள் மிகுமேயானால் பிறவியின் நோக்கமாகிய அறிவின் வளர்ச்சி தடைப்படும். அறிவானது அமைதியான வழியில் இயங்க நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இயற்கையாக எழும் தேவைகள் மூன்று. அவை :- பசி, வெப்ப தட்ப ஏற்றத்தாழ்வு உணர்வு, உடல் கழிவுப் பொருட்களின் உந்துவேக உணர்வு. இந்த மூன்று உணர்வுகளையும் காலத்தோடும், அளவோடும், தக்க பொருட்களையும், வசதிகளையும் கொண்டு **(with appropriate facilities and commodities)** நிறைவு செய்து கொண்டேயிருக்க வேண்டும். மேலே விளக்கப் பெற்ற பசி உணர்வு, வெப்ப தட்ப ஏற்றத்தாழ்வு உணர்வு, உடல் கழிவுப் பொருட்களின் உந்துவேக உணர்வு இவைகளைக் காலத்தோடு நிறைவு செய்யாவிட்டால், உடலில் அமைதி குலைந்து நலம் கெட்டுத் துன்ப உணர்வுகளாக மாறும்.

இயற்கைத் துன்பங்களை அவ்வப்போது சமன் செய்து கொண்டே இருப்போமானால் மிகுதி இருப்பது என்ன? அமைதியும், இனிமையும் தாமே! அமைதியே அறிவு ஆராய்ச்சிக்கும், உயர்வுக்கும் ஒத்ததாகும். எனவே, அமைதி காப்பது என்பதே மனிதனின் தலையாய செயல்.

# பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலிருந்து நியூசிலாந்து அணியின் டெய்லர் நீக்கம்



பாகிஸ்தானுக்கு எதிராக சொந்த மண்ணில் இருபது-20 போட்டிகளில் விளையாடும் நியூசிலாந்து அணியில் இருந்து மூத்த வீரர் ரோஸ் டெய்லர் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி நியூசிலாந்தில் பயணம் மேற்கொண்டு 3 இருபது ஓவர் போட்டி மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது.

இந்நிலையில், இப்போட்டித் தொடருக்கான 18 பேர் கொண்ட நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் சனிக்கிழமை அறிவிக்கப் பட்டது.

இதில் 36 வயதாகும் மூத்த வீரர் டெய்லர் இடம் பெறவில்லை. இருபது-20 போட்டிகளில் சிறப்பாக விளையாடாத காரணத்தால் அவர் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை காயம் காரணமாக பந்துவீச்சாளர் பெர்குசனும் நியூசிலாந்து அணியில் இடம்பெறவில்லை.

அத்தோடு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருபது- 20 போட்டிகளில் பங்கேற்காமல் ஓய்வு எடுத்துக் கொண்ட முன்னணி வேகப் பந்து வீச்சாளர் டிரனட் போல்ட், இறுதி இருபது- 20 போட்டிகளில் பங்கேற்பார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி மிட்செல் சாண்ட்னர் தலைமையிலான நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பிபா விருதுகள் - 2020



2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த பிபா கால்பந்தாட்ட விருதுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

சர்வதேச கால்பந்து சங்க கூட்டமைப்பு ஆண்டுதோறும் கால்பந்து விளையாட்டில் சிறந்த வீரர், வீராங்கனை, பயிற்சியாளர்கள் என சிறந்தவர்களை தேர்வு செய்து விருதுகள் வழங்கி வருகிறது.

2020 ஆம் ஆண்டு விருதுக்கான இறுதிப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பிபா ஆண்கள் சிறந்த வீரர் விருது, ஜுவென்டஸின்கிறிஸ்டியானோ ரொனால்டோ, பார்சிலோனாவின் லியோனல் மெஸ்ஸி மற்றும் பேயரன் முனிச்சின் ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி ஆகியோர் இறுதிப் போட்டியாளர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (4)

# சனத் ஜெயசூரியவின் தந்தை காலமானார்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சனத் ஜெயசூரியவின் தந்தை டன்ஸ்டன் ஜெயசூரிய 80 ஆவது வயதில் நேற்று காலமானார்.

உடல் நலக்குறைவினால் சில நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது இறுதிச் சடங்குகள் இன்று மாத்தறையில் நடைபெறும். (4)

# டோனி விக்கெட் கீப்பராக தேர்வானது எப்படி?

## தேர்வுக்குழு தலைவர் தெரிவிப்பு



இந்திய அணியில் டிராவிட்டிற்கு பதிலாக, டோனி விக் கெட் கீப்பராக தேர்வானது எப்படி என்பது குறித்து அப் போதைய தேர்வு குழு தலை வர் கிரண் மோர் தெரிவித் துள்ளார்.

இந்திய அணிக்கு மூன்று வித கோப்பைகளை வாங்கிக் கொடுத்து பெருமை சேர்த்த வர் டோனி. அவர் தலைமை யிலான இந்திய அணி பல சாத னைகளை படைத் துள்ளது. குறிப்பாக இருபது- 20 உலகக்கிண்ணம் மற்றும் 50 ஓவர் உலகக்கிண்ணம் வென்று கொடுத்தார்.

இதையடுத்து கடந்த 50 ஓவர் உலகக் கிண்ண தொடருக்கு பின் எந்த ஒரு சர்வதேச போட்டிகளிலும் விளையாடாமல் திடீரென்று ஓய்வை அறிவித்தார்.

இந்நிலையில், முன் னாள் தேர்வுக்குழு தலை வர், கிரண் மோர், ராகுல் டிராவிட் இந்திய அணிக்காக 75 சர்வதேச போட்டிகளில் விக்கெட் கீப்பராக இருந்தார்.

அவருக்கு அந்த பணி யில் இருந்து ஓய்வு கொடுக்க திட்டம் தீட்டினோம். இதற்காக முழுநேர விக்கெட் கீப்பர்களை தேட வந் தோம். அப்போது தான் டோனியின் பெயர் எங்களின் கண்களில் பட்டது. அவரது கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் வித்தியாசமான அணுகுமுறை என்பதால் கென்யா அணிக்கு எதிராக விளையாட இந்திய ஏ அணி திரண்டு இருந்தது.

அந்த அணியில் இவ ரைத் தேர்வு செய்து அனுப்பி வைத்தோம். அந்த சுற்றுப் பயணத்தில் அதிரடியாக விளையாடிய டோனி 600 ரன்களுக்கு மேல் அடித்தார்.

இந்திய அணியில் அதிரடியாக ஆட விரேந்தர் சேவாக் மற்றும் யுவராஜ் சிங் ஆகிய இருவர் மட்டுமே இருந்த னர். அப்போது தான் டோனியையும் அணியில் இணைத்தால் அதிரடியாக விளையாட இன்னொரு வீரர் இருப்பார் என்று நினைத்தோம்.

மற்றவர்களை காட்டிலும் இவர் அதிரடியாக விளையாடினார். இதன் காரண மாகத்தான் அவரை அணி யில் சேர்த்தோம் விக்கெட் கீப்பராகவும் நியமதித்தோம் என தெரிவித்தார். (4)

# ஆச்சரியத்தில் ஆழ்த்திய ஏழு வயது சிறுமி



கனடா நாட்டிலுள்ள ஒட்டாவா என்ற பகுதியில் வசித்து வருபவர் ரோரி வான் உஃப்ட். இவருக்கு 7 வயது தான் ஆகிறது. ஆனால் வயதிற்கும் சாத னைக்கும் சம்பந்தமில்லை என்று எல்லோரும் கூறுவது போல் இச்சிறுமியும் சாதனை படைத்து ள்ளார்.

அதாவது , அங்குள்ள பளு தூக்கும் போட்டியில் 11 மற்றும் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட சிறுமி ரோரி வான் உஃப்ட்,டெட் லிப் டிங் முறையில் 80 கிலோ, ஸ்னாட்ச் முறையில் 32 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் முறையில் 43 கிலோ, ஸ்வாகுட் முறையில் 61 கிலோ பளு தூக்கி உலகையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். (4)

# இந்தியன் சுப்பர் லீக்; கோவா 2வது வெற்றி




ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கோவா அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஒடிசாவை வீழ்த்தியது.

11 அணிகள் இடையிலான 7-வது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டி கோவாவில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த 25 ஆவது லீக் ஆட்டத்தில் ஒடிசா எப்.சி.- எப்.சி.கோவா அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் கோவா அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஒடிசாவை வீழ்த்தியது. கோவா வீரர் இகோர் அன்குலோ 45 ஆவது நிமிடத்தில் வெற்றிக்கான கோலை அடித்தார்.

பதில் கோல் திருப்ப ஒடிசா அணி எடுத்த முயற்சிக்கு கடைசி வரை பலன் கிடைக்கவில்லை.

5ஆவது ஆட்டத்தில் ஆடிய கோவா அணி பெற்ற 2 ஆவது வெற்றி இது வாகும்.

5ஆவது ஆட்டத்தில் களம் கண்ட ஒடிசா அணிக்கு இது 4ஆவது தோல்வியாகும். (4)

# உடுவில், தெல்லிப்...

கிழமை இரவு அறிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 33 பாடசாலைகளும் தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 40 பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகிறது.

மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியின் பின் இந்த இரண்டு கல்விக் கோட்டப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, மருதனார்மடம் கொரோனாத் தொற்றுக் கொத்தணியின் முதலாவது நபரின் மகளுக்கு நேற்று தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவர் கடந்த வாரம் பாடசாலைக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18)

# தொற்று எண்ணி...

பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

மேற்கண்டவாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது.

அதிகாரிகளும் கொரோனாத் தொற்றாளர்களும் சமூகத்தின் நன்மை கருதி செயற்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 36 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தனது முகநூலில் 6 பேருக்கே தொற்று என கூறியுள்ளார்.

மேலும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் கூறியிருக்கின்றார். இந்த எண்ணிக்கைக் குழப்பம் தொடர்பாக கொரோனாத் தடுப்பு தேசிய செயலணியின் தலைவர் சவேந்திர சில்வாவிடம் ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், யாழ்.மாவட்டத்தில் 36 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். 6 பேருக்கே தொற்று என ஊடகங்களில் வெளியான செய்தி தவறானது. ஊடகங்களுக்கு தொற்றாளர் எண்ணிக்கையை குறைத்து எதற்காக கூறப்பட்டது என்பது தொடர்பில் தேசிய செயலணி கவனம் செலுத்தும்.

கொரோனா என்பது கொடிய நோய். இந்த விடயத்தில் சுகாதார பிரிவினரும் பொதுமக்களும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். கொரோனா அற்ற ஆண்டாக மலர வேண்டும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்புமாகும் என்றார். (ஞா)

# ஐஸ்கிறீம் கடை...

அமைந்துள்ள ஐஸ்கிறீம் கடை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள குறித்த கடையின் சமையல் அறையில் இருந்த எரிவாயு கசிவு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் யாழ்ப்பாணம் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக உடனடியாக மாநகர தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்ததை அடுத்து தீயணைப்புப் பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஞா-33)

# 39 பேருக்கு...

பொதுச் சந்தையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை 39 பேரிடம் பிசிஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய எழுமாறாக 39 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

மருதனார்மடம் பொதுச் சந்தையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் கொத்தணி ஏற்பட்டுள்ள நிலையில் திருநெல்வேலி சந்தையில் உள்ள வியாபாரிகள் உள்ளிட்ட 39 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

இந்த மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஞா)

# பாடசாலைக்கு...

அக்ஷா முஸ்லிம் பாடசாலை சுகாதார பிரிவினரின் ஆலோசனைக்கமைய மூடப்பட்டுள்ளது.

வவுனியா புதிய சாளம்பைக்குளத்தினை சேர்ந்த தாய்க்கும் பிள்ளைக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

புதிய சாளம்பைக்குளம் கிராமம் நேற்று முன்தினம் முதல் சுகாதார பிரிவினரால் முடக்கப்பட்டு அப்பகுதி மக்கள் அனைவரும் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சுகாதார பிரிவினரின் ஆலோசனைக்கமைய வவுனியா சாளம்பைக்குளம் அல் அக்ஷா முஸ்லிம் பாடசாலை எதிர்வரும் 16ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளது. (ஞா-250.299)

# எனது 5 மாத...

பிரமந்தனாறு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவருடைய உடலில் குழந்தை பிறந்தமைக்கான அடையாளங்கள் காணப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருக்கின்றனர்.

அங்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், தனது வயிற்றில் 5 மாத சிசு இருந்ததாகவும், அதை பெற்று புதைத்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் புதைக்கப்பட்ட இடம் பிரமனந்தனாறு என்றும், உழவனூர் என்றும் மாறி மாறி தகவல்களை வழங்கி வருவதால் குழந்தை புதைக்கப்பட்ட இடத்தினை கண்டுபிடிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. சம்பவம் தொடர்பான தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஞா-100,312)

# உடுவில் பிர...

யாழ்.உடுவில் பகுதி முடக்கப்பட்டிருக்கும் நிலையில் குறித்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள் நுழைவதும், வெளி செல்வதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவு முழுவதும் நேற்று முன்தினம் இரவு முதல் தற்காலிகமாக முடக்கப்பட்டிருந்தது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைக் கிராமங்களில் பொலிஸார் மற்றும் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# 26...

இதன் மூலம் மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியினால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 33ஆக உயர்வடைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள முதலாவது கொரோனா வைரஸ் பரவல் கொத்தணி இதுவாகும். நாட்டில் ஒக்ரோபர் 4ஆம் திகதிக்குப் பின்னர் மினுவாங்கொட, பேலியகொட மற்றும் சிறைச்சாலை கொத்தணிக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள 4ஆவது கொரோனாவைரஸ் கொத்தணி இதுவாகும்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடுமுழுவதும் எழுமாறாக தெரிவு செய்யப்படுவோரிடம் பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனடிப்படையில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் மருதனார்மடம் சந்தி முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் உள்ள சாரதிகளிடம் கடந்த புதன்கிழமை மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18)

# கொரோனாத்...

62 மற்றும் 71 வயதுடைய பெண்கள் இருவரும் 76 வயதுடைய ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் நேற்று +650 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில்ஜனவரிமாதம்முதல்நேற்றுவரை 32 ஆயிரத்து 785 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

# உடுவில் பிரதேசம்...

நாட்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை மருதனார்மடம் சந்தை, விற்பனை நிலையங்கள் மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகள், தெல்லிப்பழை கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஞா)

# எழுமாற்று...

த்து சந்தைகளிலும் எழுமாறாக பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஞா)

## வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1639 திகதி 2020.12.13

ஆங்கில எழுத்து: 0 — வெற்றி இலக்கங்கள்: 09 10 49 55

தேசிய லொத்தர் சபை

## மெகா பவர்

திகதி 13/12/2020 சீட்டிழுப்பு இலக்கம் 0702

வெற்றி எழுத்து: E — சுப்பர் இலக்க: 05 — வெற்றி இலக்கங்கள்: 06 30 37 70

## மஹஜன சம்பத

திகதி 2020/12/13 சீட்டிழுப்பு இலக்கம் 4335

ஆங்கில எழுத்து: K — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 9 4 2 4 6 4

தேசிய லொத்தர் சபை

## கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 13.12.2020 சீட்டிழுப்பு இலக்கம் 2630

ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 13 17 37 79

தேசிய லொத்தர் சபை

## தன நிதானய

திகதி -2020.12.13 சீட்டிழுப்பு இலக்கம் -372

ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 37 43 67 68

## அத கோடிபதி ADA KOTIPATHI

கிழமை: ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்பு இல: 1131 வர்ணம்: பச்சை சீட்டிழுப்பு திகதி: 13.12.2020

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 90,411,205

வெற்றி இலக்கங்கள்: 13 17 28 45 — ஆங்கில எழுத்து: J

அபிவிருத்தி லொத்தர் சபை — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## சனிதா Shanida

கிழமை: ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்பு இல: 3461 வர்ணம்: இளஞ் சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 13.12.2020

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,830,856

வெற்றி இலக்கங்கள்: 06 26 58 60 — ஆங்கில எழுத்து: D

ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம்

அபிவிருத்தி லொத்தர் சபை — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=

திகதி: 13.12.2020 வெற்றி வாரம்: 3012 வர்ணம்: ஊதா

வெற்றி இலக்கங்கள்: 31 32 41 61 — துலாம்

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,398,205

## SUPER BALL சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம் 1305 நிறம் சிவப்பு சீட்டிழுப்பு திகதி 13/12/2020 தினம் ஞாயிற்றுக்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: I 06 20 47 54

அடுத்த சுப்பர் ஜக்பொட் 57,819,910

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

## ஜய (சுப்பர் ஜக்பொட்)

சீட்டிழுப்பு வாரம்: 663 வர்ணம்: மஞ்சள் திகதி: 13.12 2020 ஞாயிறு

F 59 67 68 77

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,765,145

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

### ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில்

# பாரிய அரசியல் கூட்டணி விரைவில் உருவாக்கப்படும்

### மனோ எம்.பி அறைகூவல்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பாரிய அரசியல் கூட்டணி உருவாக்கப்படும். அதில் வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சி இணையலாம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரின் முகநூல் பதிவில்,

ஐக்கிய மக்கள் சக்தி (ஐ.ம.ச.) கூட்டணியாக முதலில் உருவாக்கப்பட்டது. தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி சஜித் வசமாகும் என்ற எதிர்பார்ப்பை ரணில் மீண்டும் தவிடுபொடி ஆக்கியதால், ஐ.தே.கவை மீண்டும் மறுசீரமைக்கும்எண்ணம்இப்போது கைவிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தனிக் கட்சியாக வளர்தெடுக்கப்படும். அதையடுத்து ஐக்கிய மக்கள் கூட்டணி உருவாக்கப்படும். அதில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட பங்காளிக் கட்சிகள் இணைந்து பாரிய எதிரணி கூட்டணியாக உருவாக் கப்படும். இதில் ஒரு பங்காளியாக ஐக்கிய தேசியக் கட்சி விரும்பினால் இணையலாம்.

இந்தப் பொது நோக்கில் நேற்று சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, குமார வெல்கம போன்றோர் ஐக்கிய மக்கள் சக்தியில் நேரடியாக இணைந்து, எமது கூட்டணியின் பிரதான கட்சியான அதைப் பலப்படுத்துகின்றார்கள். பாரிய எதிரணி கூட்டணியை உருவாக்கும் இந்த நடவடிக்கைகளை நாம் ஆதரிப்போம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞ)

# முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே உடுவில் பிரதேசம் முடக்கப்பட்டது

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியுடன் தொடர்புடைய 104 பேருக்கு மீளவும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைமைஏற்பட்டுள்ளது. எனவே இந்த 104 பேரில் பலருக்கு தொற்று இருப்பதற்கான வாய்ப்பு இருப்பதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உடுவில் பிரதேசத்தில் 104 பேரும் வசிக்கின்ற கிராம அலுவலகர் பிரிவுகள் முடக்கப்பட்டது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆறு பேருக்குத் தொற்று: ஆனால் ஏன் ஒரு பிரதேச செயலகப் பிரிவு யாழில் முடக்கப்பட்டது என்ற ஒரு கேள்வி சமூக வலைத்தளங்கள், ஊடகங்களில் எழுப்பப்பட்டு வருகின்றமை தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருதனார்மடம் சந்தையில் வியாபாரம் செய்யும் ஒருவர் அதேவேளை முச்சக்கர வண்டிச் சாரதியாகவும் தொழில் புரிந்துள்ளார். முச்சக்கர வண்டிச் சாரதிகள் மத்தியில் எழுமாறாக எடுக்கப்பட்ட மாதிரிகளில் இவருக்கு கொரோனாத்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த தொற்றாளர் வியாபாரம் செய்த மருதனார்மடம் சந்தைக்கு வழமையாக பொருள் விற்பனை செய்ய வரும் வியாபாரிகள் அவர்களது குடும்பத்தார், தொற்றாளரது குடும்பத்தார், அவர்களது நெருங்கிய உறவினர்கள், தொற்றாளருடன் நெருக்கமாக பழகிய நண்பர்கள் மற்றும் அவர் செய்து வரும் இரு தொழில்களிலும் தொடர்புபட்ட வழமையான வாடிக்கையாளர்கள் என 398 பேர் அடையாளப்படுத்தப்பட்டு அனைவரது பி.சி.ஆர் மாதிரிகளும் நேற்று முன்தினம் பெறப்பட்டுள்ளன.

இவற்றில் நேற்று முன்தினம் 283 மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டன. இவற்றில் 06 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

171 பேருக்கு தொற்று இல்லை என்ற முடிவு பெறப்பட்டது. 02 பேருக்கு முடிவு சொல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் 104 மாதிரிகள் மீளவும் பெறப்பட்டு பரிசோதிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாதிரிகள் மீளப்பெறப்பட்டு பரிசோதிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானமானது அதற்குரிய விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களது தொழில்நுட்பப் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அதில் வெளியார் தலையீடுகளுக்கு இடமில்லை.

இருப்பினும், இந்த மீள் மாதிரி சேகரிப்பு மற்றும் பரிசோதனைகளுக்கு எடுக்கும் ஒன்று அல்லது இரண்டு நாள் அவகாசத்தில் கொரோனா இன்னும் பலருக்குப் பற்றிப் பரவ அதிக சாத்தியம் உண்டு.

எனவேதான் துரிதமாகச் செயற்பட்ட சுகாதாரத்துறையினர், தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் வசிக்கும் பகுதிகள் மட்டுமல்லாது மாதிரிகள் மீள எடுத்துப் பரிசோதிக்கப்பட வேண்டிய 104 பேர் வசிக்கும் பகுதிகளையும், உள்ளடக்கித் தயாரித்த நிலவரைபடத்தின் (Ground map) அடிப்படையில் வரு முன் காக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே தனிமைப்படுத்தப்பட வேண்டிய கிராம சேவையாளர் பிரிவுகள் தீர்மானிக்கப்பட்டன.

வரும் நாட்களில் கிடைக்கும் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளுக்கு அமைவாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் விடுவிக்கப்படும். அல்லது தொடர் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுமா என்றமுடிவுகள்மேற்கொள்ளப்படும்என்று கூறியுள்ளார். (ஞ)


## காணி விற்பனைக்கு

இருபாலை கிழக்கு,
C.C பாடசாலை வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
( தரகர் தேவையில்லை. )
தொடர்புகளுக்கு
076 640 0974, 077 805 1655
(4957)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025 /=KG
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-848)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தசாமி நவராஜசிங்கம்
( முன்னாள் நீதிமன்ற பணியாளர் )
திதி : அமாவாசை (14.12.2020)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எக் காலமும் உயிர் வாழும்
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம் நெஞ்சமதில்
நிலைத்து நிற்கும்.

மண்ணில் 09.04.1952
விண்ணில் 26.11.2019

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
(4948)

## வேலை வாய்ப்பு

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு Holdings Lanka Company இல் இணைய அரிய சந்தர்ப்பம்.
நிர்வாக அதிகாரி, மேற்பார்வையாளர், செயல்திட்ட அதிகாரி, அலுவலக உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர்.
➤18 – 30 வரையிலான வயதிற்கு உட்பட்டவர்கள்,
➤நேர்முகத் தேர்வுக்கு CV, NIC Copy, Birth Certificate கொண்டு வரவும்.
076 808 2241
(4958)

## மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536
(C-894)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.